
# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 3 - இருக்கை 3 ஒரு பொல்லாப்புமில்லை 01-02-2009

50/-





**அரசியல் தீர்வொன்று வேண்டும்**


**தோட்டியின்**

ISSN 1800-3699

**குறி மாறிய தோட்டா**

**பதிவு...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
“இலங்கை ஆசிய நிலையம்”
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation





கோமாளி கொடுங்கோலன் 18





எங்களுக்கு அரசியல் தீர்வொன்று வேண்டும்! 24





முரண்படும் 174 30





விற்பனைச் சந்தையில் கிட்னி 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறம்

**வணக்கம் வாசகர்களே**

புத்தாண்டு பிறந்து எட்டுநாட்களில் ஒரு பேனை சாகடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஊடக நிறுவனம் கொழுத்தப்பட்டிருக்கிறது. பிறந்த புத்தாண்டில் நிம்மதியான வாழ்வையும் சுபீட்சத்தையும் எதிர்பார்த்த எங்களுக்கு உச்சந்தலையில் விழுந்தது பேரிடி.
இப்பொழுதுதான் விளங்குகிறது பயங்கரவாதம் என்பதன் கருப்பொருள் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் என்று.
வன்னியில் தினம் தினம் சாவே சரித்திரமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது உறவுகளுக்காக என்ன செய்திருக்கின்றோம். எதையுமே சிந்திக்க முடிவதுமில்லை செயற்படுத்த முடிவதுமில்லை. கைகள் கட்டப்பட்டிருக்கும் எங்களால் செய்யமுடியாததை கடல்கடந்திருக்கும் உறவுகள் செய்யவேண்டும். செய்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பு எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. உண்ணாவிரதமிருக்கிறார்கள், உயிரைக் கூட தியாகம் செய்ய தயாராக இருக்கிறார்கள்.

இப்பொழுதுதான் இங்கு மக்கள் எழுச்சிக்கான தளங்களை அரசியல் எதிர்கட்சிகளும், சமூக அமைப்புக்களும் அத்திவாரமிடுகின்றன. காலங்கடந்த ஞானம்.
வெளியேற வழிதெரியாது வன்னியில் நித்தம் நித்தம் தவித்துக் கொண்டிருக்கும் எம் உறவுகளுக்கும், செத்துக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இந்தக் கூட்டிணைப்பு தீர்வைத் தருமா? மக்களாகிய நீங்களும் காலமும்தான் பதில் சொல்ல வேண்டும்.



பொறுமையுடன் அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

உங்கள்

ஆசிரியர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதிப்பகத்தார்...



தமிழ் மக்களுக்கு இது சோதனைகள் மிகுந்த காலம். முப்பது வருடங்களுக்கு மேலாகப் போராடி அளப்பற்ற தியாகங்கள் புரிந்து காப்பாற்ற முயன்ற எங்கள் உரிமைகள் காற்றோடு காற்றாய்ப் பறந்து விடுமோ வென்று நாம் அஞ்சி நடுங்குகின்ற காலம். இருளைத்தவிர எதிர்காலம் என்று ஒன்றுமே தோன்றவில்லையே என்று மயங்கும் காலம். யுத்தம் மட்டுமல்ல கிழக்கில் நிகழ்ந்ததைப் போன்று வடக்கிலும் யுத்தத்திற்கு அப்புறமாய் சந்தேகத்திற்குரியவர்களைத் தீர்த்துக் கட்டும் மனித வேள்வி ஏற்படப்போகின்றதே என்று நினைக்கையில் அங்கம் பதறுகின்றது.

இந்தக் காரிருளிலும் ஒரு வெள்ளிக் கீற்று எம் கண்களில் தெரிகிறது. அந்த வெள்ளிக் கீற்றுத்தான் கடந்த முப்பதாண்டு அனுபவங்களுக் கூடாக நாம் ஈழத்தமிழர்கள் படிக்கக் கூடிய பாடம். அது இதுதான். ஆயுதப் போராட்ட அரசியல் ஆகும், ஆயினும் ஆயுதப் போராட்டம் மட்டுமே அரசியல் ஆகாது.

உலகின் எல்லா வெற்றிகரமான போராட்ட இயக்கங்களின் வரலாற்றிலும் பார்த்தால் அவை தனக்கென வொரு ஆயுத அணியை வைத்திருக்கும் அதே வேளை அதனுடன் தொடர்பில்லாத ஆனால் அதே சமயத்தில் அதே குறிக்கோள்களைக் கொண்ட அரசியல் அணியொன்றினையும் வைத்திருந்தார்கள். ஆயுதங்கள் பேச்சுவார்த்தை மேடையைத் தயார் செய்தாலும்கூட பேச்சுவார்த்தை மேடையில் அரசியல் அணியே முன்நிற்க வேண்டும். விடுதலைப் புலிகளோ தமது இராணுவ அணியையே அரசியல் அணியாக உலவ விட்டார்கள். அந்தோ.

பொறுங்கள். தவறு அவர்கள் மீது இல்லை. ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மீதுதான் என்போம். இதுவரை காலமும் தமிழ்க் கட்சிகளின் வெகுஜன நடவடிக்கைகள் ஓய்ந்த எண்பதுகளின் பின்னர் தமிழ் மக்களாகிய எங்களுடைய அரசியல் உரிமைகளை வென்றெடுக்க என்னதான் செய்தோம்? சண்டை பிடித்து வருவது வரட்டும் என்று சும்மாதானே கிடந்தோம்? அங்கொன்றும் இங்கொன்றுமாக அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முயன்ற ஓரிரண்டு தமிழர்களுக்கும் எங்கள்




# தேசமே விழித்தெழுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவை நல்கினோமா? இல்லை. தமிழ் மக்களை நம்பி எந்த ஊர்வலத்தையோ எதிர்ப்புப் போராட்டத்தையோ ஆரம்பிக்க முடியாது. ஒருவரும் வரமாட்டார்கள். எவராவது அதற்கான சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொண்டாலும் எங்களுக்கு ஒரேயொரு தலைவன்தான் அவன் வன்னியில்தான் என்று அடித்து அமுக்கினோமா இல்லையா? எத்தனை

பொதுக்கூட்டங்களை இப்படிச் சொல்லி நாம் குழப்பி அரைவாசியில் நிற்க விட்டிருப்போம்?
இராணுவப் பண்பாட்டின் (militaristic culture) அடிப்படையில் நிகழ்வுகளைப் புலிகள் நகர்த்தினார்கள். இதற்குத் துணையாக ஈழத்தமிழரின் உள்ளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளை விளங்காத சிங்கள மக்களுடன் நாம் ஒத்து வாழவேண்டிய தேவையை உணராத புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் ஆலோசனைகளையும் உந்துதல்களையும் பெற்றுக் கொண்டனர். இதற்கு நடுவில் இங்குள்ள மக்களுடன் வாழ்ந்து முதிர்ந்தவர்களின் குரல்கள் எடுபடவேயில்லை. அதை இப்படியும் சொல்லலாம். இந்த யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருந்த தமிழ் மக்கள் இவர்களுக்குத் தங்கள் ஆதரவுகளை நல்குவதன் மூலம் எடுபடவைக்கவில்லை.

இந்த இனப்பிரச்சினையைப் பயங்கரவாதம் என்று உருவகித்ததன் பயனாக அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னுமொரு பயங்கரவாதத்தை உருவாக்கவேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அந்தப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சிங்கள மக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்பதன் மூலம் தான் இந்த நாட்டின் பிரஜைகள் உனும் உருத்தை நாம் நிலை நாட்ட முடியும்.




# இது தான் சட்டம்!!

**காலி** வீதி வழியாக தனது மிதி வண்டியிலே விரைந்து கொண்டிருந்தான் அறிவுடைநம்பி. தனது தாயார் குளியலறையிலிருந்து விழுந்து விட்டார் என்று கைப்பேசிக்குத் தகவல் வந்ததும். பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுப் புறப்பட்டு விட்டான். கொழும்பிலுள்ள அவளின் வீட்டிற்கு விரைந்து கொண்டிருக்கும் போது றொக்சி தியேட்டருக்கு அருகிலுள்ள சமிக்ஞை விளக்கினருகே காவல்த்துறையைச் சேரந்த ஒருவர் அவனை நிறுத்துமாறு சைகை காட்டினார். ஏன் சிவப்பு விழுந்தா சைக்கிளை நிப்பாட்டத் தெரியாதா...? இல்லை அய்யா.... பச்சை எரியேக்கை தான்.... என வார்த்தைகளை விழுங்கினான்.

பொய் சொல்லாத .....! அதட்டினார் அந்த அதிகாரி. எங்கை இருக்கிற....? என்ன வேலை செய்யிற....? இங்கை தான் ஆசிரியர் வேலை செய்யிறன். மனைவியும் சுகமில்லாம ஆசுப்பத்திரீயிலை அய்யா பிள்ளையள் வீட்டுலை தனிய நான் போய்த்தான் இரவுச் சாப்பாடு செய்து குடுக்கவேணும். விட்டிடுங்க என்று மன்றாடியும் மணித்தியாலக் கணக்காக விசாரித்தார் அந்த அதிகாரி. வா காவல் நிலையத்துக்கு என்று அதட்டினார்.

இனியும் பேசிப்பயனில்லை என உணர்ந்தவன் ஒரு முடிவுக்கு வந்தான். அடையாள அட்டையை எடுக்குமாப் போல இரு ஆயிரம் ரூபாய்த் தாள்களை வெளியே எடுத்தான். உடனே அந்த இரண்டாயிரம் ரூபாவையும் வாங்கிக் கொண்ட அதிகாரி சொன்னான், சட்டத்தை யார் மீறினாலும் எனக்கு பொல்லாத கோபம் வருமென்று....!

மட்டுவில் ஞானக்குமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலோ ஸ்ரீ லங்கா Airtel

**சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலிட்டுள்ள எயார் டெல் நிறுவனம் இலங்கை மக்களின் பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கடந்த ஜனவரி 12 ஆம் திகதி முதல் தனது சேவையினை இலங்கையில் ஆரம்பித்துள்ளது.**



**ஒருவன் ஓடினால் பார்த்து ஓடு ஊர் ஓடினால் ஒத்தோடு" என்ற பழமொழிக்கு இணங்க எல்லோரும் அடித்துப் பிடித்து எயார் டெல் சிம் வாங்க ஓடினர். ஆனால் இதில அநேகம் பேருக்கு உண்மையான விஷயம் தெரியவில்லை என்பதே என்பதே மனவருத்தம் மிக்க விடயமாகும்.**

**இங்கு** ஏற்கனவே நான்கு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இருக்கத்தக்கதாக ஐந்தாவது நிறுவனமாக தடம்பதிக்கும் எயார் டெல் நிறுவனம் 2007 இல் புதிய தொலைத்தொடர்பு நிறுவனமாக இலங்கையுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இவ்வொப்பந்தத்திற்கு அமைய இந்திய நிறுவனமான பார்தி எயார் டெல் நிறுவனம் இலங்கையில் முதலிட்டுள்ள மிகப்பெரிய தொகை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பார்தி எயார் டெல் நிறுவனமானது 1995ம் ஆண்டு இந்தியாவில் தனது தொலைத்தொடர்பு சேவைகளை ஆரம்பித்தது. எயார் டெல் நிறுவனமானது உலகின் 3 ஆவது பெரும் தொலைத்தொடர்பு நிறுவனமாகும். இந்தியாவில் மட்டுமன்றி சீசெல்ஸ், ஆசியா போன்ற நாடுகளிலும் தனது சேவையினை விஸ்தரிப்பு செய்துள்ளதுடன் சென்ற ஆண்டு அந்நாடுகளில் 3G சேவையினையும் வழங்கியது.

எயார் டெல் தனது சேவையினை இலங்கையில் ஆரம்பிக்கின்ற தினம் குறித்து மக்கள் மத்தியில் பாரிய எதிர்பார்ப்புகள் காணப்பட்டது ஏனோ உண்மைதான். இன்று நாளை என்று நாட்களை எயார் டெல் நிறுவனமும் தள்ளிப்போட்ட வண்ணமே இருந்தது. எவ்வாறிருப்பினும் இறுதியாக ஜனவரி 12 முதல் தனது சேவைகளை ஆரம்பிப்பதாக ஊடகங்களினூடு வெளியிட்டது. எயார் டெல்லின் சேவை ஆரம்பம் குறித்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டவுடனேயே மக்கள் நாடுபூராகவும் உள்ள எயார் டெல் கிளைகளை சுற்றி வளைத்தனர். தனது பதிவுகளை மேற்கொண்டனர். எனினும் அக்காலப்பகுதியில் தமது தொலைபேசிக்கட்டணங்கள் குறித்து எவ்வித தகவலினையும் எயார்டெல் நிறுவனம் வெளியிட்டிருக்கவில்லை. எனினும் எயார்டெல் நிறுவனம் குறித்த அறிமுகத்தினை இலங்கையர் ஏற்கனவே பெற்றிருந்ததன் காரணமாக இந்த எயார்டெல் மோகம் எம்மவரை அரவணைத்துக் கொண்டது. இந்தியாவின் சுமார் 35 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள இந் நிறுவனம் இலங்கையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உள்ள 20 மில்லியன் மக்களை எவ்வாறு திருப்திப்படுத்தப் போகின்றது என்பதே இன்று பலரது மனதிலும் எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கையின் எயார்டெல் கையடக்க தொலைபேசி சேவை அங்குரார்ப்பணம் தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் நிகழ்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கடந்த ஜனவரி 12 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் எயார்டெல் நிறுவனத்தின் தலைவர் சுனில் பார்தி மிட்டால், பிரதித் தலைவர் ராஜன் பார்தி மிட்டால் உட்பட நிறுவனத்தின் உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டதுடன், எயார்டெல் குறியீட்டு தூதுவரான நடிகர் ஷாருக்கான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பார்தி எயார் டெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் பார்திமிடால் நாம் இங்கு தடம்பதிப்பதனையிட்டு பெருமிதம் அடைகின்றோம். நாம் எமது சேவையின் பல மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கவிருந்தோம். எனினும் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் பல விடயங்கள் இருந்தன. எனினும் அவையனைத்தையும் தாண்டி இன்று எமது சேவைகளை ஆரம்பிக்கிறோம். நாம் எதிர்காலத்தினை வெற்றிகரமாக சந்திக்கவிருக்கின்றோம். கடந்த சில நாட்களாக இடம்பெற்ற பதிவுகளைப் பார்க்கும் பொழுது எமக்கு பலமான சாதக சூழ்நிலை இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கையடக்கத் தொலைபேசி சேவை என்பது வர்த்தகம் அல்ல. அது ஒரு பொருளாதாரக் கருவியாகும்.

தொடர்பாடல் என்பது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும். இதனை நாம் இந்தியாவில் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம். இலங்கையில் 200 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யும் எமது நிறுவனம் மிகச் சிறந்த கட்டணங்களுடன் தொலைத்தொடர்பு சேவையை இலங்கையில் தற்போது ஆரம்பித்துள்ளது. நிச்சயம் இலங்கையரின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்வோம் என்றார்.









இலங்கையில் பல கையடக்க தொலைபேசி சேவை வழங்குனர்கள் இருந்தாலும் பாவனையாளர்கள் யாரும் சுதந்திரமாக உரையாட முடிவதில்லை. அயல் நாடான இந்தியாவில் ரூபா 2.40 ஆகவும் பங்களாதேஷில் ரூபா 1.60 ஆகவும் வெளிச்செல்லும் அழைப்புக்கட்டணங்கள் அறவிடப்படும் நிலையில், இலங்கையில் இன்றுவரை வெளிச்செல்லும் அழைப்புக்கான சராசரிக் கட்டணம் 5 ரூபாவாகவே இருக்கின்றது. அதனைக் கருத்திற் கொண்டு சுதந்திரமாக உரையாடக்கூடிய கட்டண முறைமையை எயார்டெல் தருகின்றது.

**வலையமைப்புக்கு நெரிசல் நேரம் (பீக்) நெரிசலற்ற நேரம் (ஓப்பீக்) என்ற வேறுபட்ட கட்டண முறை இல்லை. இரு வகையான முற்கொடுப்பனவு இணைப்புக்களே வழங்கப்படுகின்றன. இவற்றில் இருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து வெளிச்செல்லும் அழைப்புகளுக்குமான கடடணம் (வரிகள் தவிர்த்து) ரூபா 2.50 என்ற போதும் எதிர்வரும் மார்ச் 31 வரை 2 ரூபாவே அறவிடப்படும். பிற்பொடுப்பனவு இணைப்புக்களிலிருந்து வெளிச்செல்லும் அழைப்புக்காக நிமிடத்துக்கு 2 ரூபா அறவிடப்படும். குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) கட்டணம் ஒரு ரூபாவாகும். அனைத்து வலையமைப்புகளிலும் இருந்து உள்வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டண விபரங்களினால் இலங்கை எயார்டெல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி அமாலி நானயக்காரவினால் அறிவிக்கப்பட்டது. தற்போது எயார்டெல் ஐந்து மாகாணங்களில் மாத்திரமே தனது சேவையினை வழங்குவதற்கு தயாராக உள்ளது. எதிர்காலத்தில் ஏனைய நான்கு மாகாணங்களையும் தனது வலையமைப்பில் இணைத்துக்கொள்ள எயார்டெல் தயாராக உள்ளது.

இது தவிர இந்தியாவுக்கான ரோமிங் சேவைக்கு 50 வீத கட்டணக்குறைப்பு வழங்கப்படும். அதே வேளை 3.5G சேவை (கொழும்பு, கண்டி, காலி), data, blackberry Broad band சேவைகள், இசைக்குறியீடுகள் 'மெஜிக்கை சேவை போன்ற பல்வேறு புதிய பெறுமதிசேர் சேவைகளும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும்.

அத்துடன் வாடிக்கையாளர் எந்தவொரு எயார்டெல் முகவரிடமும் தமது பட்டியலுக்கான கட்டணத்தை செலுத்தலாம். இதற்கென நாடு முழுவதும் 12000 விற்பனை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 23 எயார்டெல் சேவை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அபான்ஸ், கார்கில்ஸ், கீல்ஸ் போன்றவற்றினூடாகவும் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. எயார்டெல் கையடக்க தொலைபேசி இலக்கங்கள் 075 5 என்ற இலக்கத்தை கொண்டு ஆரம்பிக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு 075 5 555 555 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவோ அல்லது www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவோ முடியும்.







| Post Paid | Hello SL Postpaid 300 | Hello SL Postpaid 600 | Annual Plan 1800 |
|---|---|---|---|
| Activation Fee | 750.00 | 750.00 | |
| Monthly Minimum Commitment | 300.00 | 600.00 | 1800.00 |
| Monthly Usage Discount Value | 300.00 | 200.00 | 150.00 |
| Billing Rate | Per Minute | Per Minute | Per Minute |
| In Coming | | | |
| Airtel to Airtel | Free | Free | Free |
| Airtel to Other | Free | Free | Free |
| Outgoing-Local | | | |
| Airtel to Airtel | 2.00 | 2.00 | 2.00 |
| Airtel to Other | 2.00 | 2.00 | 2.00 |
| SMS | | | |
| Airtel to Airtel | 1.00 | 1.00 | 1.00 |
| Airtel to Other | 1.00 | 1.00 | 1.00 |
| International SMS | 5.00 | 5.00 | 5.00 |
| GPRS/HSDPA (3.2mbps) | 0.1 | 0.1 | 0.1 |

All Rates Exclusive Government Tax /Levies

| Pre Paid | Celebration | Hello SL |
|---|---|---|
| Monthly Rental * | 50.00 | 50.00 |
| Free Value Bundle ** | 100.00 | 100.00 |
| Maximum Retail Price | 249.00 | 199.00 |
| Billing Rate | Per Minute | Per Minute |
| In Coming | | |
| Airtel to Airtel | Free | Free |
| Airtel to Other | Free | Free |
| Outgoing-Local | | |
| Airtel to Airtel | 2.00 | 2.00 |
| Airtel to Other | 2.00 | 2.00 |
| SMS | | |
| Airtel to Airtel | 1.00 | 1.00 |
| Airtel to Other | 1.00 | 1.00 |
| International SMS | 5.00 | 5.00 |
| GPRS/HSDPA (3.2mbps) | 0.1 | 0.1 |

All Rates Exclusive Government Tax /Levies

*Monthly rental waved off for 3 months

**Only valid for the first month

எயார் டெல்லின் புதிய கட்டண முறையினை இலங்கையில் ஏற்கனவே இருக்கும் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பிற்கொடுப்பனவு இணைப்பொதிகளின் கட்டணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பாரியதொரு வித்தியாசத்தினை அது காட்டவில்லை என்பதே பலரதும் கருத்தாகும். அந்தவகையில் இலங்கையர் மத்தியில் பாரிய எதிர்பார்ப்புகளை வளர்த்திருந்த எயார்டெல் இறுதியில் ஏமாற்றத்தை தந்துள்ளது என்பதே பலரது ஏக்கமாக இருக்கின்றது. எனினும் எயார்டெல் அறிமுகம் செய்துள்ள முற்கொடுப்பனவுகளுக்கான கட்டண விபரங்களை பார்க்குமிடத்து ஏனைய நிறுவனங்களின் கட்டணங்களுக்கு சவால் விட்டிருப்பதனையும் காணமுடிகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் சேவையின் ஆரம்பம் வரை தனது முதலீட்டில் அரைவாசியினை செலவு செய்து இன்று இலங்கையில் தடம்பதித்துள்ள எயார்டெல் அறிமுகம் செய்துள்ள புதிய கட்டணத் திட்டங்களும் எயார்டெல் புதிய பகேஜ்களும் இலங்கையர் மனதில் எவ்வாறு இடம்பிடிக்க இருக்கின்றது என்பதனையும் அவர்கள் எவ்வாறான விநியோக உத்திகளை கையாளப் போகின்றார்கள் என்பதனையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் நிறுவனங்களும் ஊடகங்களும் எவ்வாறுதான் கருத்து வெளியிட்டாலும் தீர்மானம் எடுக்கும் உரிமை நுகர்வோரான மக்களிடமே காணப்படுகின்றது. அல்லவா!

சாஹிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநகரசபை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

கடந்த வருடம் நவம்பர் மாதம் கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் நதி உதவியுடன் மட்டக்களப்பு மாநகர சபையில் நவீன மயப்படுத்தப்பட்ட நிதிப்பிரிவும் சமூக நல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிறிமன் றைவ் வீதியில் மட்டக்களப்பு ரொட்டறிக்கழகம் மூலம் அமைக்கப்பட்ட வயோதிபர் இளைப்பாறும் பூங்காவும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.வெயின் புறாக் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வுக்கு மாநகர சபை முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் தலைமை வகித்தார்.

இந்நிதிப்பிரிவை நவீனமயப்படுத்து முகமாக தளவடிவமைப்பு செய்யப்பட்டதுடன், தளபாடங்கள்,கணினி உபகரணங்கள், கனணி பயிற்சி என்பன வழங்கப்பட்டன. இவற்றுக்கு கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியம் ரூபா 50 லட்சத்திற்கு மேல் செலவு செய்துள்ளதுடன் கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் சமூக நல அபிவிருத்தி திட்டத்தின் கீழ். ரூபா.5 இலட்சம் நிதியுதவியும் வயோதிபர் இளைப்பாறும் பூங்காவிற்கு வழங்கப்பட்டது. இதற்கு ரொட்டறிக்கழகமும் ரூபா 63,000.00 ஐ தனது பங்களிப்பாக வழங்கியுள்ளது.

மேலும் இவ்வைபவத்திற்கு மட்டக்களப்பு மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்கள், மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் கனேடிய மாநகர சபைகளின் ஒன்றிய மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



01 கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வெயின் புறாக் குத்து விளக்கேற்றும் நிகழ்வு.



02 மாநகர சபை முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் அவர்கள் குத்து விளக்கேற்றும் நிகழ்வு.



03 மாநகர சபைகளின் ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வெயின் புறாக் நிதிப்பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு



04 மாநகர சபை முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் அவர்கள் நினைவுக்கல்லை திறந்து வைக்கும் நிகழ்வு



05 மாநகர ஆணையாளர் மா. உதயகுமார் அவர்கள் நிதிப்பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு.



06 கனேடிய மாநகர சபைகளின் ஒன்றிய மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கூ. நேசராசா அவர்கள் நிதிப்பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வெயின் புறூக் வயோதிபர் இளைப்பாறும் பூங்காவை திறந்து வைக்கும் நிகழ்வு.

07





08

மட்டக்களப்பு மாவட்ட ரொட்டறிக்கழகத்தவைவர் இராமநாதன் உரையாற்றும் போது



வைபவத்தின் போது முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் அவர்கள் உரையாற்றும் போது

09



10

வைபவத்தின் போது கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிட நிகழ்ச்சிட்ட முகாமையாளர் வெயின் புறூக் அவர்கள் உரையாற்றும் போது



வைபவத்தின் போது கனேடிய மாநகர சபைகளின் ஒன்றியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மாநகர ஆணையாளர் மா. உதயகுமார் அவர்கள் ஆரம்ப உரையாற்றும் போது

11



# ஹா.. ஹா.. ஹா..




**பித்தன்** - என்னதான் மனுசனுக்கு வீடு, வாசல், காடு, கரையெண்டு எல்லாம் இருந்தாலும்... ரெயினில போகணும் எண்டா...?

**விசரன்** - பிளாட்பாரத்துக்கு வந்துதான் ஆகணும். இதுதான் வாழ்க்கை

**விசரன்** - தம்பி தம்பி இங்க வாவன் . இந்த றோட்டில பஞ்சர் எங்க ஒட்டுவாங்க தெரியுமா?

**பித்தன்** - ட்யூப்ல எங்க ஓட்டை இருக்கோ அங்கதான் ஒட்டுவாங்க

**விசரன்** - யப்பா உன்னை நான் டிரைவரா சேக்கிறன் . ஸ்டார்ட்டிங் ஸலரியா இரண்டாயிரம் தாரன் . ஒகேவா?

**பித்தன்** - உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு ஸார்

**விசரன்** - இருக்கட்டும் இருக்கட்டும்

**பித்தன்** - ஸ்டார்ட்டிங் ஸாலரி ரெண்டாயிரம் ஓகே . இந்த டிரைவிங் ஸலரி எவ்வளவு கொடுப்பீங்க ?

**விசரன்** - ஆகா கௌம்பிட்டானே...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாளி கொடுங்கோலன்!!

## இடி அமின்



**உலகம்** கண்ட மிக கொடூர மனம் படைத்த சர்வாதிகாரிகள் பலர் எனினும் அவர்களில் மிக கோமாளித்தனமும் கொடூர மனம் படைத்த உகண்டாவின் இடி அமின் தாதா குறிப்பிடத்தக்கவன்.

இடி அமீன் (Idi Amin Dada 1924 ஒகஸ்ட் 16, 2003) உலகின் அதிபயங்கர கொடுங்கோலர்களில் ஒருவன். 1971 முதல் 1979 வரை உகண்டாவை ஆட்சி செய்தான்.

இவன் பிறந்த ஆண்டு தொடர்பில் சரியான தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. 1924 ஆம் ஆண்டு அல்லது 1925 இல் பிறந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. இவனது ஆட்சி





பற்றிய விபரங்கள் பல பயங்கரமானவை ஆகும். இடி அமின் ஒரு சாதாரண குடும்பத்தில் ஒரு விவசாயியின் மகனாக 1924ஆம் ஆண்டு அல்லது 1925 இல் பிறந்தான். தொடக்கக் கல்வி மட்டுமே பயின்ற இடி அமின், தாயால் வளர்க்கப்பட்டான். 1946 இல் ஒரு சாதாரண உதவி சமையல்காரனாக ராணுவ பிரிவில் சேர்ந்த இடி அமின் பின்னர் படிப்படியாக லெப்டினன்ட் ஆக பதவி பெற்றான். 1962 இல் உகண்டா ஆங்கிலேய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. பின்னர் நடந்த சம்பவங்கள் உலக வரலாற்றில் ரத்தத்தில் எழுதப்பட்டன!

1966 இல் இடி அமின் மேஜர் ஜெனரல் ஆக ஒபோடே அசால் நியமிக்கப்பட்டான். பின்னர் இருவரும் சேர்ந்து உகண்டாவை அழிவின் பாதையில் கொண்டு செல்லத் தொடங்கினர். 1971 இல் ஒபோடே அரசை தனது ராணுவ பலத்தால் முற்றுகையிட்டு இடி அமின் சர்வாதிகாரியாக உகண்டாவின் ஆயுட்கால அதிபராக தன்னை அறிவித்து கொண்டான்.

வெள்ளையர்களை தனது பல்லக்கு சிப்பந்திகளாகவும் குடை பிடிக்க வைத்த இடி அமின் தனது ஹீரோ இமேஜ்ஜை கறுப்பின மக்களிடையே தக்க வைத்து கொண்டான். 1972 இல் தனது கனவில் கடவுள் தோன்றியதாகவும்.. உகண்டா ஒரு கறுப்பர் நாடு எனவும் அதில் உள்ள ஆசியர்கள் குறிப்பாக இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் உடனே நாட்டை விட்டு ஓட வேண்டும் என்று கூறினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்ணூறு நாட்கள் கெடு விதிக் கப்பட்டு ஆசியர்கள் வெளியேற்றப் பட்டனர்.

ஈவு இரக்கமற்று ஒபோடேவின் ஆதரவாளர்களையும் தன்னை எதிர்க்கும் எல்லா கறுப்பின பிரிவினரையும் கொன்று குவிக்கத் தொடங்கினான் இடி அமின். அந்த ஆண்டு மட்டும் அவன் கொன்றவர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்திற்கும் அதிகமானவர்கள்! அடியோடு ஒரு சில கிராமங்கள் அழிக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் நைல் நதியில் வீசப்பட்டு. பின்னர் அவைகளை அடைப்பு ஏற்படாமல் வெளியே எடுத்து போட வேலை ஆட்கள் நியமிக்கப்பட்டனர்! 1978 இல் உள்நாட்டு கலகங்களும் பொருளாதார பிரச்சினைகளும் உகண்டாவில் தலைவிரித்து ஆடத் தொடங்கியது. அதனை மூடி மறைக்க அண்டை நாடான தான்சானியா மீது போர் தொடுத்தான் இடி அமின். தான்சானியா மற்றும் உள்நாட்டு கலக படைகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் இடி அமின் லிபியாவில் தஞ்சம் புகுந்தான். பின்னர் அங்கேயும் எதிர்ப்புஅதிகரிக்கவே சில காலம் ஈராக்கில் வாழ்ந்தான். அவனுக்கு ஏறக் குறைய நாற்பது பிள்ளைகளும் நான்கு மனைவிமார்களும் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே ஆண்டு சவுதி அரசு அவனுக்கு அடைக்கலம் அளித்து இலங்கை ரூபாய் மதிப்பில் மாதம் ஒரு லட்சத்து இருபதாயிரம் உதவித் தொகையும் வீடும், கார் மற்றும் பணியாட்களையும் கொடுத்தது!





பதினைந்து ஆண்டுகள் சவுதி அரேபியாவில் வாழ்ந்த இடி அமின். தான் மிகவும் சந்தோசமாக இருப்பதாகவும் தான் எதற்கும் வருத்தம் தெரிவிக்கப் போவதில்லை என்றும் கூறினான்.தனக்கு மீன் பிடிப்பதிலும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் குரான் வாசிப்பதிலும் மிகுந்த ஆர்வம் என்றும். தான் ஜனாதிபதியாக இருந்த போது பெற்ற சந்தோசத்தை விட சவுதியில் மிகுந்த மகிழ்ச்சியோடு இருப்பதாக உகண்டாவின் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்தான்.

இடி அமின் 2003 இல் சவுதி அரேபியாவில் கோமா நிலையில் இருந்து ரத்த அழுத்தத்தாலும் சிறு நீரக கோளாறாலும் பாதிக்கப்பட்டு இறந்தான். அவன் உயிரோடு வந்தால் சிறையில் அடைக்கப்படுவான் என்று உகண்டாவின் அப்போதைய ஜனாதிபதி அறிவித்தார். இறந்த உடல் வந்தால் ஒரு சாதாரண உகண்டா மனிதனைப் போல அடக்கம் செய்ய அனுமதிக்கப்படுவான் என்றும் தெரிவித்தார். ஆயினும் இடி அமின் இறந்த சில மணி நேரங்களில் சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் புதைக்கப்பட்டான்.

**ராஜ்குமார்**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நீர் அறிந்திருக்காத சிலுவைகள்

வாழ்வுக்கு தவிக்கிற குழந்தைகள்
மறைந்திருக்கிற தரையில்
சிலுவைகள் புதைக்கப்பட்டிருக்க
யேசுவே நீர் இங்கு பிறக்க வேண்டாம்.

உமக்கான மாட்டுத்தொழுவங்கள்
எம்மிடம் இல்லை.
வைக்கோல் பட்டறைகளும் இல்லை.

நீர அறிந்திருக்காத சிலுவைகளை
நாம் சுமக்கிறோம்.

மழைக்காலத்தில் ஏணைகள்
இல்லாமல் தடிகளில் உறங்குகிற
குழந்தைகளை
வெட்டிப்போட கத்திகளுடன் திரிகின்றன
ஏரோது மன்னனின் படைகள்.





குதிரைகள் அலறுகிற இரவில்
குழந்தைகளை நாம் கட்டுக்குள்
கொண்டு வைத்திருக்கிறோம்.

படுக்கைகளில் குருதி வழிந்தோடுகிறது
தூக்கத்தில் பறி எடுத்த
குழந்தையை விமானம் தின்று
வீசிவிட்டுப் போகிறது.

நீர் மீண்டும் ஒரு சிலுவையை
இங்கு விட்டுச் செல்ல வேண்டாம்.

உம்மால் தாங்கிக் கொள்ள முடியாத
வலிகளான தொழுவங்களில்
போரிடம் பலியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன
நமது தேசத்தின் குழந்தைகள்.

நீர் இந்த தேசத்தில்
இப்போது பிறக்க வேண்டாம்.

கத்திகள் அலைகிற காடுகளில்
நம்முடன் எங்கு வரப் போகிறீர்?
வெட்டுப்பட்ட சொற்களுடன்
நாம் ஒரு பாடலை தேடுகிற போரில்
நீர் சுமந்திராத
சிலுவைகளை சுமக்கிறோம்.

ஏரோது மன்னன் பெரும் பசியுடன் வாளுக்கு
இரை தேடுகிற நாட்களில்
இங்கு எண்ணிக்கையற்ற மரியாள்கள்
தமது குழந்தைகளை கொண்டு ஒளிகின்றனர்.

தீபச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்கு அரசியல்

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்ததையிட்டு பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களையும் ஊகங்களையும் வெளியிட்டு வருகின்றனர். இந்தத் தடை தொடர்பாகவும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாகவும் கேட்டறிவதற்காக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தனைச் சந்தித்தோம். இருக்கிறமிற்காக உணர்ச்சித்துடிப்புடன் அவர் வழங்கிய நேர்காணல் இது.

**இலங்கை அரசியலில் தமிழ் த்தேசியக் கூட்டமைப்பின் பங்கு என்ன? அது தமிழ் மக்களுக்கு எவ்வாறான பங்களிப்பை ஆற்றுகின்றது?**

**யுத்தத்தை தீமூட்டி கொழுந்துவிட்டு எரியச்செய்கிற நிலையாகத்தான் இலங்கை அரசாங்கம் இதை செய்திருக்கு.**




மற்றவர்களுடைய பார்வைக்கு ரி.என்.ஏ. தற்போது மக்கள் பலமாகக்கொண்ட ஒரு கட்சி. மக்களால் உருவாக்கப்பட்ட கட்சி ஆகையினால் எங்களுடைய கட்சி தொடர்ந்தும் உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி எங்களுடைய மக்களுடைய உரிமைக்காக கதைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆகையினால் எங்களுடைய வேலைத்திட்டங்கள் எங்களுடைய செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் பலவகையில் முட்டுக்கட்டை போட்டாலும் நாங்கள் இன்று ஒன்றுபட்ட கட்சியாக மற்ற கட்சிகள் போல் குரங்கு போல் தாவாமல் ஒரு கொள்கை ஒரு தாயகப் போராட்டத்துக்காக தொடர்ச்சியான அரசியல் போராட்டத்தை செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதில் பல்வேறு எமது நாடாளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் இழந்தாலும் இன்றைக்குப் பலம் பொருந்திய யாராலும் உடைக்க முடியாத ஒரு சீரான போக்கில் போய்க்கொண்டு இருக்கிறது தான் எங்கள் கட்சி. ஆகையினால் எங்களுடைய வேலைத்திட்டம் எங்களுடைய மக்களுக்கு சுய நிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுப்பது மட்டுமல்ல. எங்களுடைய மக்களைப் பாதுகாக்கவேண்டிய நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம். இன்று இந்த யுத்தத்தின் மத்தியில் வாழ்கின்ற மக்களுக்கு ஆறுதலாக இருக்கின்றது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே.

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலம் குன்றியுள்ளதாகப் பேசப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**



பலத்தை இழந்து இருக்கின்றது என்ற கருத்தினை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம் பலம் தான் இருக்கின்றது. மற்றவர்களுடைய பார்வைக்கு அதனை இழந்த மாதிரித்தான் இருக்கின்றது. காரணம் சில செயற்பாடுகளை எங்களால் செய்யமுடியாது. எங்களுடைய பிரதேசங்களுக்கும் எங்களுடைய மாவட்டங்களுக்கும் போக முடியாத நிலையில் மக்களுக்கும் எங்களுக்கும் இடையில் தொடர்புகளை அறுக்கக்கூடிய கட்சிகளும் மற்றது சிறு சிறு இராணுவக் குழுக்களும் அதாவது துணை இராணுவக் குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு ஆயுதபலத்தைக் கொடுத்து எங்களுடைய செயற்பாடுகளை மடக்குகின்ற தன்மைதான் இங்கு ஏற்பட்டிருக்கு. ஆகையினால் மக்கள் மத்தியில் இருக்கின்ற செல்வாக்கும் மக்களுக்காகப் போராடுகின்ற தன்மையும் குறைந்து போகவில்லை. இன்று தமிழத் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாகத்தான் இருக்கின்றது. அதாவது தமிழர்களுடைய பிரச்சினைகளை வெளிநாட்டுத் தூதுவர்களாக இருக்கட்டும் வெளிநாட்டில் எந்தவிதமான சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கட்டும் எங்களிடம் தான் முதலில் தமிழர்களின் பிரச்சினைகளைக் கேட்கிறார்கள். ஆகையினால் நாங்கள் மக்களுடன் இருக்கின்றோம். மக்கள் எங்களுடன்

# தீர்வொன்று வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் தொடர்பிற்காக

Tel: 0112 778525
fax: 0112 799374
e.mail: acckmp@hotmal.com

இருக்கின்றார்கள். மக்கள் எங்களுக்கு அரணாக இருக்கின்றார்கள். மக்கள் எங்களை வெறுக்கவில்லை. மக்கள் எங்களை வெறுக்கின்ற மாதிரியான தோற்றத்தை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கில் இடம்பெற்ற தேர்தலின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏன் அதில் பங்குபற்றவில்லை?

வடக்குக் கிழக்கு இணைந்தது தான் எங்களுடைய தேசியப் போராட்டம். ஒரு கோட்டை மட்டும் நாங்கள் ஆளவிரும்பவில்லை. அதாவது கிழக்கு மாகாணம், கிழக்கு மாகாண சபை என்ற ரீதியில் ஆளவிரும்பவில்லை. அப்படியென்றால் நாங்கள் தாயகக் கோட்பாட்டை தற்காலிகமாக விற்றதுக்குத்தான் சமனாக இருக்கும். வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு தீர்வுத்திட்டம் தான் எங்களுக்குத் தேவை. அந்தத் தீர்வுத்திட்டங்களுக்குள் வருகின்ற பிரச்சினையைப் பேசித் தீர்க்கலாம். அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கட்டும் எங்களுடைய வேட்பாளர்களாக இருக் கட்டும் யாராக இருந்தாலும் அங்கு போய் எங்களுக்கு சுயமாகவும் சுதந்திரமாகவும் வேலை செய்யக் கூடிய தன்மை இருக்கவில்லை. ஏனென்றால் அங்கு ஆயுத கலாச்சாரம் இருக்கிறது. சென்ற வருடத்துக்கு முந்திய வருடம் வரவு செலவுத்திட்டம் சமர்பிக்கப்பட்ட போது எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கடத்தப்பட்டார்கள். அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் எந்தவிதத்தில் நாங்கள் அங்கு போய் நின்று தேர்தலைச் செய்ய முடியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப் புலிகளின் சார்பானது எனக் கூறுகின்றனர்?ஏன்?

விடுதலைப் புலிகள் ஏன் போராடுகிறார்கள்? சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள். கருத்து ஒன்றுதான் நாங்களும் தமிழ் மக்களுக்கு ஒரு தாயகம் வேண்டும். ஒரு சுயநிர்ணய உரிமை வேண்டும். தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து போராடுகின்றோம். ஆனால் ஒரு வித்தியாசம் எங்களுடைய கையில் ஆயுதம் இல்லை. அரசியல் ரீதியாக நாங்கள் போராடுகின்றோம். விடுதலைப் புலிகள் இதை அஹிம்சை ரீதியாக 1977 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக விடுதலைப் புலிகள் தான் என்று சொல்லப்பட்டு புலிகள் இயக்கம் இன்று தடைசெய்யப்பட்ட நிலையில் வந்திருக்கிறது. ஆனால் மக்கள் இருக்கிறார்கள் எங்களோடு. ஆகவே எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஒன்றாக இருக்கின்றபடியால் விடுதலைப் புலிகளையும் எங்களையும் சேர்த்து வைத்துப் பேசுகிறார்கள். ஆனால் அங்கு எல்லோரும் தமிழர்கள்தான் எங்களுடைய உரிமைக்காகத்தான் போராடுகிறார்கள் . அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள். ஆனால் நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டு எங்களுடைய குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அப்ப எங்களுக்கு குத்தப்பட்ட முத்திரை விடுதலைப் புலிகள் என்று. ஏனெனில் நாங்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புவைத்து சமாதான காலத்தில் எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் வேலை செய்தபடியால் அந்த முத்திரை சிங்கள அரசாங்கத்தினால் எங்களுக்குக் குத்தப்பட்டது. இன்றைக்குத் தடையும் அதற்கு ஒரு காரணம்தான்.

தமிழ் மக்கள் எத்தகைய கலாசாரத்தை தீர்வை எதிர்பார்க்கிறார்கள். இந்தப் போராட்டம் எப்போது முடிவடையும் எனக் கூறமுடியுமா?

கலாசாரம் என்று வந்து நீங்கள் எதைக் குறிப்பிடுறீங்கள் என்று தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு ஆயுதக்கலாசாரத்துக்கு மத்தியில் எங்களுடைய தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. காரணம் எங்கட பாஷை ஸ்ரீ என்ற பாஷையில் தொடங்கப்பட்ட பிரச்சனை இன்று ஆயுதம் ஏந்துகிற அளவுக்கு எமது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் தூண்டப்பட்டார்கள். ஏன் தூண்டப்பட்டார்கள். எங்களுடைய உரிமை கிடைக்காத பட்சத்தில்தான் அவர்கள் தூண்டப்பட்டார்கள். அரசியல் தீர்வுத்திட்டம் தமிழர்களுடைய பிரச்சனை. இலங்கை அரசு இதயசுத்தியுடன் அதைப்பார்த்து அதற்கொரு நியாயமான தீர்வைத் தரும்வரைக்கும் இந்தப் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். ஆகையினால் விடுதலைப் புலிகளை தடைசெய்வதனாலும் இல்லை இடங்களைக் கைப்பற்றுவதாலும் இந்தப் போராட்டம் நிற்கப்போவதில்லை. மக்களுடைய போராட்டம் அதாவது உங்களுக்கு வாழவேண்டும். நீங்கள் சந்தோசமாக இருக்கவேண்டும். சாகவேண்டும். இதுதான் உங்கள் விருப்பம். நீங்கள் இடையில் நாய் மாதிரி சாகவேண்டும் என்று விரும்புறீங்களா? இல்லைதானே. அதேமாதிரித்தான் ஒவ்வொரு தமிழ்மகனும் விரும்புகிறார்கள். சுதந்திரமாக சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கனவு. சும்மா கண்டவன்ட கையால சாகவேண்டிய அவசியமில்லை. இன்று றோட்டிலிருந்து வெளியே வருவதென்றாலும் ஆயுதப்படையினரிடம் நாங்கள் கேட்கவேண்டிய நிலை. வீட்டில் சமைப்பதென்றாலும் கேட்கவேண்டிய நிலை. இன்று கிழக்கு மாகாணத்தில் சாணுக்கும் முழத்துக்குமாக சோதனைச்சாவடிகள் இருக்கு. அப்ப இதெல்லாம் எந்த வகையில் சேர்க்கப்போகின்றீர்கள். ஏதோ ஆயுதம் தான். ஆயுதகலாச்சாரம்தான் என்று நீங்கள் சொல்வதை பார்க்கப்போனால் அந்த ஆயுதத்தைக் கொண்டே இலங்கை அரசாங்கம் எங்களுடைய தமிழ்மக்களை அடக்குகிறது. இந்த நிலையில் எங்களுடைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்று சொல்வதைவிட எம்முடைய தமிழ்மக்கள் ஒரு அரசியல்



தீர்வைத்தான் எதிர்பார்க்கிறார்கள். சுயநிர்ணய உரிமை. அதாவது எங்களுடைய மக்கள் ஒரு அடிமைகள் போல் இல்லாமல் தாங்கள் விரும்பியதுபோல் தாங்களே தங்களை ஆள்வது. அந்த அடிப்படையில் தான் இந்தப் போராட்டம் தொடங்கப்பட்டிருக்கு. ஆகையினால் இன்றைக்கு இந்தத் தடை என்பது வந்து சமாதானத்தின் கதவுகளை அடைத்திருக்கின்றது. ஆகையினால் எங்களுக்கு அரசியல் தீர்வுவொன்று தான் வேண்டும்.

**விடுதலைப்புலிகள் மீதான இலங்கை அரசாங்கத்தின் தடை தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?**

விடுதலைப்புலிகளை தடை செய்தது ஒரு பாரதூரமான செயல். பிரணாப்முகர்ஜியின் வருகையை தடைசெய்வது தமிழ்நாட்டில் எழுந்துள்ள தமிழ்மக்களுக்கான ஆதரவை தடைசெய்வது. வெளிஉலகில் இடம்பெயர்வாழ் தமிழர்களின் ஆதரவு. இப்படியான முழுத்தடைகளுக்கு நங்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று வெளிநாட்டு தூதரகங்கள் உலகநாடுகள் எல்லாம் சேர்ந்து ஒரு கோரிக்கையை முன்வைப்பதை தடைசெய்கிறது. தற்காலிகமான ஒரு தடை. பிரணாப் முகர்ஜி வரப்போறார் என்றால் அவர் வந்து விடுதலைப்புலிகளை பேசுங்க என்று சொல்ல ஏலாது. ஏனென்றால் உங்கட நாட்டிலயும் தடை செய்திருக்கு. எங்கட நாட்டிலயும் தடை செய்திருக்கு. அதை விட்டுட்டு தமிழ்மக்களுக்கு வேறு ஒரு கோரிக்கையை வைக்கிற என்றால் வையுங்கோ. தடைசெய்யப்பட்ட இயக்கம் சம்பந்தமாக அங்க என்ன நடக்குது. தமிழர்களுடைய உரிமை ஒட்டுமொத்தமாக அடக்கப்படுகிற தடை என்ற பெயரில். இது சமாதானத்துக்காகன ஆண்டாக நான் கருதமாட்டேன். 1977 தொடக்கம் விடுதலைப் புலிகளுடன் மக்கள் இருக்கின்றார்கள். இந்த 2009 ஆம் ஆண்டு கூட இருப்பார்கள். ஆகையினால்

**இன்று றோட்டிலிருந்து வெளியே வருவதென்றாலும் ஆயுதப்படையினரிடம் நாங்கள் கேட்கவேண்டிய நிலை. வீட்டில் சமைப்பதென்றாலும் கேட்கவேண்டிய நிலை. இன்று கிழக்கு மாகாணத்தில் சாணுக்கும் முழத்துக்குமாக சோதனைச்சாவடிகள் இருக்கு. அப்ப இதெல்லாம் எந்த வகையில் சேர்க்கப்போகின்றீர்கள்?**

மாக சேர்ந்தது தான் இந்த விடுதலைப்புலிகளின் தடை. தமிழ் மக்களுக்காக விடுதலைப்புலிகளுக்காக குரல்கொடுக்கிற இடம்பெயர் வாழ் மக்களுக்கு ஒரு தடையாக அது எடுக்கப்பட்டிருக்கு. தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை தொட இது ஒரு யுத்த ஆண்டாக தான் நாங்கள் கருதுகிறோம். மேலும் யுத்தத்தை தீமூட்டி கொழுந்துவிட்டு எரியச்செய்கிற நிலையாகத்தான் இலங்கை அரசாங்கம் இதை செய்திருக்கு.

நேர்காணல் : சாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டியின் பதிவு...



**இலங்கையில்** அண்மைக்காலமாக எரிபொருட்களின் விலை ஏறி இறங்கிக் கொண்டே இருக்கின்றது. அதற்கேற்றாற் போல பொருட்களின் விலைகளும் போக்குவரத்துக்கான கட்டணங்களும் தாளம் போட்டவண்ணமே இருக்கின்றன. இது தொடர்பாக பல கருத்து வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அண்மையில் தனியார்பஸ் கட்டணங்கள் அனைத்தும் 1 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே!!

அவ்வாறு விலை குறைப்பை மேற்கொள்ளாத பஸ்நடத்துனர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுமக்கள் 0112595555 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறையிடலாம் என்றும் அரசாங்கம் தெரிவித்திருந்தது. திடீரென விலை கூட்டச் சொன்னால் உடனே கூட்டியிருப்பார்கள். ஆனால் விலை குறைக்கச் சொன்னால் குறைத்திருப்பார்களா! இதை பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக கடந்த (07.01.09) அன்று 174 ஆம் இலக்க பஸ்ஸில் எனது நண்பர்களுடன் பலவத்தையிலிருந்து பொரளை நோக்கிப் புறப்பட்டேன். பஸ் நடத்துநர் எங்களிடம் கட்டணத்தை வசூலிப்பதற்காக வந்தார். நாங்களும் 12 ரூபாவிலிருந்து 1 ரூபா குறைக்கப்பட்டுள்ளதால் பஸ்கட்டணமாக 11 ரூபாவைக் கொடுத்தோம். ஆனால் அவரோ தற்போது கட்டணம் உயர்ந்துவிட்டது 14 ரூபா எனக் கூறிக் கட்டணம் வசூலித்தார்.

எனினும் என்னுடன் வந்த பெண் ஊடகவியலாளர் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். "பஸ் கட்டணத்தை ஏன் அதிகமாக வாங்குகின்றீர்கள். 12 ரூபாதான் இவ்வளவு காலமும் வாங்கினீர்கள். அப்படியானால் இப்போது அரசாங்கம் அறிவித்த கட்டணத்தின்படி தற்போது 11 ரூபாவே வசூலிக்க வேண்டும்" என்றார். ஆனால் நடத்துநரோ "நீங்கள் எங்கு வேண்டுமானாலும் முறையிடலாம், என்னால் பதில் சொல்லமுடியும்" என்ற தோரணையில் கதைத்தார். அப்போதும் அப்பெண் ஊடகவியலாளர் விடவில்லை.

"இவ்வளவு காலமும் நாங்கள் 12 ரூபாதான் கொடுத்தோம். காலையில் அரச பஸ்ஸில் வரும்போது 11 ரூபாதான் கொடுத்தேன். தனியார் பஸ்களில் மட்டும் ஏன் இந்த நிலைமை" என்றார். "அதற்கு அந்த நடத்துநர் தற்போது பிரிவுகள் மாற்றப்பட்டுள்ளன. அதனாலேயே இக்கட்டணம் சில இடங்களில் மாறுபடுகின்றன" என்றார்.


நாங்கள் அத்துடன் விடவில்லை. அவசர அவசரமாக எங்கள் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் போக்குவரத்து அமைச்சின் Hotline தொலைபேசி இலக்கங்களை அழுத்தித் தொடர்பு கொண்டோம். நெரிசல்... நெரிசல் என்று வந்து கடைசியாக ஒரு அதிகாரி அழைப்புக்கு வந்தார். புதிய பஸ் கட்டணங்கள் பற்றி விசாரித்து, இந்த சம்பவத்தையும் அவருக்குத் தெரிவித்தோம்.

எங்களுடைய தொலைபேசி இலக்கம் தொடக்கம், பஸ் இலக்கம், எந்த நேரம் பயணம் செய்தது, வீட்டு விலாசம் போன்ற விபரங்களைப் பெற்றுக்கொண்டார். ஆனால் எங்களுக்கு உறுதியான நடவடிக்கை பற்றி அவரால் சொல்ல முடியவில்லை.

பாதிக்கப்பட்ட ஒரு பயணி

## முரண்படும் 174?









Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org



BATTARAMULLA.RT-174.
No:00002542 17:28:26 07/01/09
NORMAL
PELAWATTE to BORELLA
( JOURNEY Kms = 007 )
FULL : 1 x 14.00 = Rs 14.00
TOTAL : Rs 14.00
9990681 HAPRIPTA CMB-4 MICROFX
LISVIN TRADING

TRAVELS
BATTARAMULLA.RT-174.
No:00002543 17:28:29 07/01/09
NORMAL
PELAWATTE to RAJAGIRIYA
( JOURNEY Kms = 006 )
FULL : 1 x 11.00 = Rs 11.00
TOTAL : Rs 11.00
9990681 HAPRIPTA CMB-4 MICROFX
LISVIN TRADING

ஆகவே என்ன நடந்தாலும் விலையைக் குறைக்காமல் கூடிய இலாபம் பெறும் யுக்திகள் அனைத்தும் பஸ் உரிமையாளர்களுக்குத் தெரிந்திருப்பது இன்னும் நிரூபணமாகியது. 1 ரூபா குறைப்பும் அரசாங்கத்தின் தேர்தல்கால யுக்தியோ என்றும் யோசித்தோம்.

ஆகவே ஒவ்வொரு மாற்றங்களைச் செய்யும் போதும் அதற்கேற்றாற் போல தமது வியூகங்களை மாற்றியமைத்து இலாபத்தை அதிகமாகப் பெறுவதற்கே உரிமையாளர்கள் முயல்கின்றார்கள் என்பது இதிலிருந்து அறியமுடிகின்றது.

ஆனால் இதிலும் மனவருத்தத்திற்குரிய விடயமொன்றும் இருக்கத்தான் செய்கின்றது. அந்தப்பெண் நடத்துநருடன் தர்க்கத்தில் ஈடுபடும் போது கூடஇருந்த பயணிகள் எவரும் அவருடன் சேர்ந்து பங்காளிகளாக மாறாதது வருந்தத்தக்கதே. என்னுடன் வந்த இன்னும் ஒரு தமிழ் நண்பர் "இது நம்மட ஊராக இருந்தால் நடக்கிறதே வேற' என ஆதங்கப்பட்டார். அதாவது அங்கு பிரயோகிக்கப்பட்ட மொழி சிங்கள மொழி என்பதால் எங்களால் எதுவும் செய்யமுடியாமல் போய்விட்டது. மேலும் பலவிதமான அச்சுறுத்தல் நிலவும் காலமிது. எங்களுக்கு நல்ல காலமில்லை என்பதால் எமது மன எழுச்சிகளை அடக்கிக் கொண்டோம். எவ்வாறு இருந்த போதிலும் இதனால் ஏமாற்றப்படுவது மக்களே. எனவே இதுபோன்ற கண்மூடித்தனமான சம்பவங்களுக்கு எதிர்காலத்தில் இடமளிக்காமல் தீர்க்கமான நீதியான தீர்வை அளிப்பது சம்பந்தப்பட்டோரின் கடமையல்லவா. பொதுமக்களே விழித்திருங்கள். இவ்வாறான சம்பவங்களுக்கு நீங்கள் இடம் கொடுக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**'இருக்கிறம்' நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிப்புணர்வைத் தூண்டுவதற்கு பாதிக்கப்பட்டோரின் அனுபவங்களை வேண்டுகிறது. நீங்கள் உங்கள் அனுபவங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் அவற்றை "தோட்டியின் பதிவு" என்னும் பகுதியில் பிரசுரிப்போம்.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெமூரியா கண்டம்

கி.பி.19 ஆம் நூற்றாண்டின் நடுவில் இங்கிலாந்தின் ரோயல் சொசைட்டி உறுப்பினர் பி.எல். ஸ்கிலேட்டர் எனும் உயிரியல் அறிஞர் கடல் கொண்ட கண்டம் ஒன்று இந்து சமுத்திரத்தின் நடுவே இருந்தது' என்று தன் கருத்தைக் கூறும் போது அதற்கு லெமூரியா என்ற பெயரைச் சூட்டினார்.

அந்தக் காலகட்டத்தில் அறிஞர் பலரின் கவனத்திற்கு உட்பட்டு ஆய்வுக்குரிய பொருளானது லெமூரியா. பரிணாம வளர்ச்சி பற்றி ஆய்ந்த தோமஸ் ஹக்ஸ்லி *(1825 ரூ 1895)* மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்துமாக்கடலில் பாலூட்டிகள் தோன்றி வளர்ந்த செனாசாயிக் என்ற காலகட்டத்தின் மூன்றாவது யுகமான மயேசென் யுகத்தில் கண்டம் ஒன்று இருந்தது என்பதை ஏற்றுக் கொண்டார். இயற்கை ஆராய்ச்சியாளர் ஆல்பேட் ரசல் வொலஸ் *(1823 - 1913)* மற்றும் ஏனஸ்ட் ஹென்றிக் ஹெகல் *(1834 1919)* என்ற ஜெர்மனிய உயிரியல் அறிஞர் ஆகியோர் ஸ்கிலேட்டரின் கருத்தை ஆதரித்தனர்.



லெமூரியா மனித இனத்தின் தொட்டிலாக இருக்கலாம் சிம்பன்சி உராங்குட்டான் கொரில்லா கப்பன் போன்ற ஆந்திரப்பாய்ட் மனிதக் குரங்குகளிலிருந்து மனிதர் முதலில் லெமூரியாவில் உண்டாகியிருக்கலாம்' என்பதை ஹெகல் முதலில் கூறினார். லெமூர் என்ற குரங்கிலிருந்து லெமூரியா என்ற பெயர் சூட்டப்பட்டது. சிறு பாலூட்டியான இதற்கு கண்கள் பெரியதாகவும் மூக்கு கூர்மையாகவும் மேனியில் மென்மையான முடிகள் மூடியதாகவும் இருக்கும் இக்குரங்கினம் அதிகமாக ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென்கிழக்குக் கரைக்கு அப்பால் இந்து மாக்கடலில் உள்ள மடகாஸ்கர் தீவில் இருக்கிறது. இது இரவில் நடமாடக் கூடிய விலங்கினம். லெமூர் மற்றும் அதை ஒத்த தொடர்புடைய குரங்கும் உலகின் வடகோளம் முழுவதிலும் வாழ்ந்திருக்கக் கூடும். அவை இன்று ஆப்பிரிக்கா தென்னிந்தியா மலேயா முதலிய நாடுகளை உறைவிடமாகக் கொண்டுள்ளன. எனவே லெமூரியா என்ற நிலப்பரப்பு ஆசியாவின் தென்கரைக்குக் குறுக்கே மலேயா தீவுக் கூட்டங்களிலிருந்து மடகாஸ்கர் தீவு வரை நீண்டு இருந்திருக்கலாம்.

உலகிலுள்ள பெருங்கடல்களில் ஒன்றான அட்லாண்டிக்கின் ஜிப்ரால்டருக்கு மேற்கே ஒரு பெருந்தீவு கண்டம் இருந்ததென்று தம் முன்னோர் குறிப்பிட்டிருந்ததைத் தத்துவஞானி பிளாட்டோ (கி.மு.427 - 347) அறிவித்திருந்ததால் அது அறிஞர் பலரின் சிந்தனைக்கு உள்ளாகி அத்தீவு மெய்யாகவே இருந்ததா? அல்லது கற்பனையா? என்ற

## லெமூரியா மெய்யா? கற்பனையா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களை எழுப்பிப் பல நூல்கள் தோன்றக் காரணமாயிற்று. தென் அமெரிக்கா ஆப்பிரிக்கா இந்தியா ஆஸ்திரேலியா அண்டார்டிகா (தென்துருவக் கண்டம்) முதலியன அடங்கிய மிகப்பெரிய கண்டம் ஒன்று 3000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் புமியின் தென்பகுதியில் இருந்ததாம். அதனை கோண்ட்வானா என்று அறிஞர்கள் குறித்துள்ளனர். அது 180 150 மில்லியன் ஆண்டுகளுக்கு இடையில் உடையத் தொடங்கியதாம்.

இருந்தபோதும் இந்தத் தொல் கண்டம் பற்றிய வரலாற்று விடையங்கள் இன்னும் தெளிவாகப் புலப்படாமல் இருக்கின்றன. இந்து மாக்கடல் அதன் சில பகுதிகளாயினும் கோண்ட்வானா நிலப்பரப்பில் அடங்கியிருந்தனவா? அல்லது அவை இரண்டும் எப்போதும் தனித்தே இருந்தனவா? இவ்வினாக்களுக்கு விடை உறுதியாகத் தெரியவில்லை. கோண்ட்வானா இந்து மாக்கடல் ஆகியவற்றின் தோற்றம் பற்றி கண்டங்கள் பிரிந்து மிதந்து செல்கின்றன என்ற யுகத்தின் அடிப்படையிலேயே புவியியல் கடலியல் அறிஞரிடையே அதிகமாக சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

ஜெர்ர்மனிய அறிஞர் ஆல்பேட் வேஜனர் 1915 இல் கண்டங்கள் பிரிந்து மிதந்து செல்கின்றன. தமது கண்டங்கள் கடற்படுகைகளின் தோற்றம் எனும் நூலில் எடுத்துரைத்தார். உலகம் பூராவும் ஒரு காலத்தில் ஒரே கண்டமாக இருந்தது பின்பு கோள்களின் ஈரப்பு விசைகள் புமிக்குள் அதிகமான ஆழத்தில் நிகழ்ந்த செயல்கள் முதலியன அவ்வுலகை இருபெரும் கண்டங்களாக பிரித்தன. ஐரோப்பா வட அமெரிக்கா








ஆசியாவின் பெரும் பகுதி அடங்கியது வடகோளம் கோண்ட்வானா கொண்டது தென்கோளம் என்பது வேஜனரின் கருத்து.

அறிஞர் ஃபிரான்சிஸ் பேக்கன் (1561 - 1626) ஆப்பிரிக்காவின் திருகு வெட்டு வடிவான மேற்குக் கரையையும் தென்அமெரிக்காவின் கிழக்குக் கரையையும் ஒப்பு நோக்கி அவை ஒன்றோடு ஒன்று பொருந்தியதைச் சொன்னவர். புவியின் உட்கருவைச் சுற்றியுள்ள திரையின் மேலும் கீழும் பக்கவாட்டிலும் அதன் மேல் கண்டங்கள் நகர்கின்றன என்ற வேஜனரின் கருத்தை அறிஞர் பலர ஏற்றுக் கொண்ட போதிலும் அறிவியலாளர்கள் அக்கருத்தை ஏற்க மறுக்கின்றனர். வேஜனரின் கொள்கை எளிதில் ஏற்புடையதாக இருந்த போதிலும் திண்மையான கண்டங்கள் கடலில் மிதந்து இடம் பெயர்வது சாத்தியம் தானா? அப்படி அவை மிதந்து செல்லக் கூடுமாயின் அவற்றை அவ்வாறு இயக்கும் ஆற்றல் எது? இவைபோன்ற வினாக்களுக்கு விஞ்ஞானபூர்வ விடை இன்னும் கிடைக்கவில்லை.

சுமார் 200 மில்லியன் ஆண்டுகள் வரையிலும் பாங்கியா என்ற பெருங் கண்டம் ஒன்று இருந்ததாம். கிரேக்கச் சொல் பாங்கியாவுக்கு அனைத்துலகு என்று பொருள். இந்தப் பாங்கியா பின்னர் லாரேசியா கோண்ட்வானா என்று இரண்டாகப் பிரிந்தது. அவற்றை தேத்திஸ் என்ற கடல் பிரித்தது. லாரேசியாவில் வடஅமெரிக்கா ஐரோப்பா ஆசியாவும் கோண்ட்வானாவில் தென்அமெரிக்கா ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா அண்டார்டிகா ஆகியவையும் அடங்கும். அவை இரண்டும் இன்று நாம் காணும் கண்டங்களாக மீண்டும் பிளவுபட்டன.

இவையனைத்தும் ஒரே காலத்தில் நிகழவில்லை. கடலுக்கடியில் உண்டாகும் சக்திகள் நிலப்பரப்பை மிதந்து மெல்ல இடம்பெயருமாறு செய்கின்றன. இது நீடிக்குமானால் நிலப்பரப்பு ஓர் ஆண்டில் சில மி.மீ. க்கு மேல் செல்லாது. இன்றைய உலகம் இனி 50 மில்லியன் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பின் இப்போது உள்ளது போல் இல்லாமல் அப்போது அட்லாண்டிக் மாக்கடல் விரிந்து காணப்படும் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் மிகப் பெரிய பிளவு உண்டாகும் ஆசியாவை நோக்கி ஆஸ்திரேலியா நகரத் தொடங்கும் என்றெல்லாம் சொல்கின்றனர் அறிவியலாளர்கள். தென்கிழக்கு ஆசியாவின் கரையோரப் பகுதி முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக கடலினுள் மூழ்கி வருகிறது என்பதைத் தற்காலத்தில் பெறப்படும் நிலவியல் சான்றுகள் காட்டுகின்றன. இவ்வாறு நிலம் நீரினுள் அமிழும் செயல் முன்னொரு காலத்தில் மிகவும் வேகமாகவும் பரந்த அளவிலும் நடந்திருக்கலாமாம்!

ஆப்பிரிக்காவின் பெரும்பாறை வெடிப்புப் பள்ளத்தாக்கு போன்ற நிலப் பரப்பு பரந்த அளவில் வெடித்துப் பிளந்து போனதைப் பார்க்கும் போது கண்டம் பிளந்தது என்ற யுகத்தில் நியாயம் உண்டு. ஆனாலும் தனிக் கண்டம் ஏன் உடைந்தது என்பதற்கான காரணம் புலப்படாமல் உள்ளது.

கண்டங்கள் அதிக தூரம் நகர்கின்றன என்ற வேஜனரின் கொள்கையை அறவே மறுப்பவர்கள் கண்டங்களின் ஓரங்களில் காணப்படும் ஒத்த தன்மையை வேஜனர் சுட்டிக் காட்டுகையில் அது தற்செயல் பொருத்தம் என்று கூறி நிராகரித்து விடுகின்றனர்.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உடைந்த கோண்ட்வானா





சிதறுண்ட பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர்கூட இந்து மாக்கடலின் வடமேற்கில் லெமூரியா என்ற பெரிய கண்டம் தொடர்ந்து இருந்து வந்தது என ஸ்கிலேட்டர கூறுகிறார்.


ஹோமோ சேப்பியன் எனும் மனிதன் தற்போது கடலில் மூழ்கிக் கிடக்கும் லெமூரியாவிலிருந்து தோன்றினான் என்றார் ஹக்ஸ்லி. அவரது கொள்கையை ஹெகல் விரிவுபடுத்தினார். இவர்கள் இருவரின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே ஃபிரடரிக் எங்கல்ஸ் *(1820 - 1895)* பரிணாம வளர்ச்சி பெற்ற ஆந்திரபாய்ட் என்ற மனிதக் குரங்குகள் இன்னும் இந்து மாக்கடலுள் மூழ்கியுள்ள பெரிய கண்டத்தில் வாழ்ந்திருக்கலாம்' என்று மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய கட்டத்தில் உழைப்பு ஆற்றிய பங்கு என்ற நூலில் கூறுகிறாரர் லெமூரியா வானது குமரிக்கண்டம் குமரிநாடு நாவலந்தீவு என தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. இளம்பூரணார் போன்ற ஆசிரியர்களின் உரைகளாலும் இறையனார் களவியல் உரை அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை போன்ற உரைகளாலும் குமரிக் கண்டம் விளக்கம் பெறுகிறது.

லெமூரியாக் கண்டத்தில் பெரும்பாலும் அழிந்தது போக மீதியாகித் தமிழ்நாட்டுடன் ஒட்டிக் கிடந்த பகுதியே குமரிநாடாயிருக்க வேண்டும் என்ற கருத்தைத் தருகிறார் பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையார் (குமரிக் கண்டம்). இப்போது இந்துமாக் கடலுள் மூழ்கிக் கிடக்கும் கோண்ட்வானா என்ற பரந்த கண்டத்தின் வடபகுதியே லெமூரியா குமரி நாடு அல்லது நாவலந்தீவு என இன்றும் நம்புகின்றனர் தமிழ் ஆய்வாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை குறைவு




ஆரம்பக் கல்வி பயில்பவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை அதிகம்உள்ளது. அவர்கள் வளர்ந்து அறிவு முதிர்ச்சிபெற அவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை மெதுவாக குறைய ஆரம்பித்து விடுகிறது

**சாதாரண** மக்களுடன் ஒப்பிடுகையில் அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை குறைவாக உள்ளதாக லண்டன் அல்ஸ்டெர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சமீபத்தில் தாங்கள் நடத்திய ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அதிலும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் அறிஞர்களுக்கு இறை நம்பிக்கை மிக மிகக் குறைவு. தாங்கள் புத்திக் கூர்மையோடு திகழ்வதற்கு தங்களது திறனே காரணம். இதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை என்றே பெரும்பாலான பிரிட்டன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டனில் ஆரம்பக் கல்வி பயில்பவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை அதிகம் உள்ளது. அவர்கள் வளர்ந்து அறிவு முதிர்ச்சிபெற அவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை மெதுவாக குறைய ஆரம்பித்து விடுகிறது. அந்த வகையில் 20-ம் நூற்றாண்டில் 137 வளரும் நாடுகளில் மக்கள் மத்தியில் சமய நம்பிக்கை குறைந்து வருகிறது. மக்கள் அறிவாளிகளாக மாறி வருவதே இதற்குக் காரணம்.

பிரிட்டனில் 3.3 சதவீதம் பேர் தான் இறை நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தனர். 68.5 சதவீதம் பேர் தங்கள் மீதான நம்பிக்கை தவிர்த்து வேறெந்த நம்பிக்கையும் இல்லை என தெரிவித்ததாக இந்த ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெற்ற பேராசிரியர ரிச்சர்ட் லைன் தெரிவித்திருக்கிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டாற்றங் கரை

வ.ஐ.ச.ஜெயபாலன்

பாகம் 14

**குளக்கரை நிறைய மேதின ஊர்வலம்போல பூக்களையும் அரும்புகளையும் உயர்தியபடிக்குச் செந்தாமரைக் கொடிகள் நிமிர்ந்து நின்றன.**

பாலன் மெய்மறந்து அலைகரை மதகில் காலூன்றி நின்றான். உலகையே சுட்டுத் தின்கிற கொடுங் கோடையில் இவ்வளவு நம்பிக்கையூட்டும் காட்சியை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. செந்தாமரைப் பூக்களின் தேனும் மகரந்தமும் கலந்து கமழ்ந்த தென்றல் அவனது நலிந்த உடலுக்கும் மனதுக்கும் ஔடதமானது. கிளர்ந்த மனதுடன் வீடு திரும்பும் பாதையைத் திரும்பிப் பார்த்த போது வெய்யில் நெத்தியடி அடித்தது. மீனாட்சி தேடுவாள் என்ற போதும் அவனுக்கு அந்த முக வெய்யிலில் வீடுதிரும்ப விருப்பமில்லாமல் இருந்தது. இறுதியில் மதகை உதைத்து சைக்கிளை உருளவைத்து இரண்டு



கிலோமீட்டர் தொலைவில் இருந்த வவுனிக்குளக் கட்டு வரைக்கும் எட்டிப் பார்த்து வரலாமென்று கிளம்பினான்.

அதுதான் அந்த வட்டாரத்திலேயே பெரிய அணைக் கட்டு. பாலன் எப்போது வன்னிக்கு வந்தாலும் பாலியாற்றை தடுத்துக் கட்டப்பட்ட வவுனிக்குளம் அணைக் கட்டை ஒருமுறை எட்டிப்பார்க்கத் தவறுவதில்லை. வவுனிக்குளம் நெடுந்தூரம் பின்வாங்கியிருந்தது. கால் நூற்றாண்டுகளுக்கு முன்னம் அணை கட்டப் பட்டபோது தண்ணீருள் ஆழ்ந்துபோன கண்டல்வெளிக் கிராமத்துக் கோவில் கோபுரம் வெளிப்பட்டுத் தெரிவதாக குளக்கட்டில்

**கால் நூற்றாண்டுகளுக்கு முன்னம் அணை கட்டப்பட்டபோது தண்ணீருள் ஆழ்ந்துபோன கண்டல்வெளிக் கிராமத்துக் கோவில் கோபுரம் வெளிப்பட்டுத் தெரிவதாக குளக்கட்டில் சந்தித்த ஒருவர் சொன்னார்.**

சந்தித்த ஒருவர் சொன்னார். அணைக்கட்டின் கீழே நெடுந்தூரத்துக்கு கொள்ளிடம் வெறுமையாகி மாடுகள் நிறைந்து மேச்சல் தரவையாக விரிந்தது கிடந்தது. தூரத்தில் கறுத்திருந்த தேக்கத்தில் இருந்து அணைக்கட்டு வரைக்கும் இழுக்கப் பட்ட கால்வாயில் மட்டும் கறுத்தத்தார் வீதி போல தண்ணீர் நீண்டிருந்தது. வவுனிக்குள அணைக் கட்டில் ஏறியபோது கிழே நுரைத்த நீர் பாலாகப் பொங்கிப் பொங்கி வாய்க்காலில் பாய்ந்து கொண்டிருந்தது. அந்தக் கோடைப் பாலையில் இரைச்சலோடு வாய்க்காலில் நுங்கும் நுரையுமாக தண்ணீர் நிறைந்து ஓடுவதை பாலன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அணைக்கட்டால் இறங்கி வீடு திரும்பும் வழியில் பத்திரிகையும், கையுமாகக் குறுக்க வந்த பரமநாதன் விதானையார்தான் சிறுபோகத்துக்கு தண்ணீர் திறந்து விட்டிருப்பதாகச் சொன்னார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960கள் வரைக்கும் விதானை என்கிற கிராம அதிகாரி வேலை தகப்பன் மகன் பேரனென்று பரம்பரை பரம்பரையாக வருகிற கிராம ஆட்சிப் பணியாக இருந்தது. அவர்கள் அடியில் பரமநாதனின் தந்தையாரான கந்தையா விதானையார்தான் கடைசிப் பரம்பரைவழி விதானையாராக இருந்தார். கந்தையா விதனையாரை யானை சுட்ட கந்தையர் என்றும் சொல்வார்கள். அது அவரது கடைசி காலத்தில் உப்பையோ நெல்லையோ வாடை பிடித்து வந்து வீட்டைத் தகர்த்த யானையை சுட்டு ஊராரிடம் தேடிய பட்டமாகும். அவருடைய பூட்டன் பண்டார வன்னியனின் தோழர்களுள் ஒருவனாம். விதானை வேலைக்குப் போட்டிப் பரிட்சை மூலம் ஆட்களைத் தேர்வு செய்கிற முறைமை வந்ததும் கந்தையா விதானையார் ஆசிரியராக இருந்த தனது மகன் பரமநாதனை விதனை வேலைக்கு விண்ணப்பிக்கும் படிக்கு ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டார். பரம்நாதன் விதானை வேலையைவிட ஆசிரியர் வேலை உயர்வானது என்று விக்கிரமாதித்தனின் உறுதியோடு திரும்பத் திரும்ப வாதாடினார். ஆனால் கந்தையா விதானையாரோ வேதாளத்தின் பிடிவாதத்தோடு அவரை ஆசிரியர் வேலையை ராஜினாமாச் செய்ய வைத்து விதானையார் ஆக்கிவிட்டார். பரமநாதன் அரசாங்க உத்தியோகத்தர் என்றாலும் அந்த பிரதேசத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அவரது கட்டுப்பாட்டில் தான் இயங்கியது. பாலனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியை அவ்வளவு பிடிக்காது. கிங்பாமசி முதலாளி நாயகம்தான் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சிப் பிரமுகராக இருந்தார். தீவிரமான தேசியவாதியான அவர் பாலனைச் சந்திக்கும் போதெல்லாம் உன்னைப் போன்ற தீவிர வாதிகள்தான் தமிழரசுக் கட்சிக்குத் தேவை வந்து சேர் அடுத்த தேர்தலில உன்னை எம்.பி ஆக்கிறம் என்று சொல்லிக்கொண்டிருப்பார். ஆனால் பாலன் அவரை ஒத்துக் கொள்ளமாட்டான். உங்கள் தமிழரசுக் கட்சி உயர்சாதி யாழ்ப்பாணிகளின் கட்சியென்று அவரைக் கிண்டல் செய்வான். நாதன் கடுப்பாகிவிடுவார். தமிழன் ஒரே இனம் என்று சொல்வார். சாதி தானாக ஒழிந்து போய்க் கொண்டிருக்குது. டானியல் டோமினிக் ஜீவா மாதிரி உன்ர கம்யூனிஸ்டுத் தோழர்கள்தான் புத்தகம் விக்கிறதுக்காக இப்பவும் சாதியைப் பற்றி எழுதிக் கொண்டி



**அவர் பாலனைச் சந்திக்கும் போதெல்லாம் உன்னைப் போன்ற தீவிர வாதிகள்தான் தமிழ ரசுக் கட்சிக்குத் தேவை வந்து சேர் அடுத்த தேர்தலில உன்னை எம்.பி ஆக்கிறம் என்று சொல்லிக்கொண் டிருப்பார். ஆனால் பாலன் அவரை ஒத்துக் கொள்ள மாட்டான்**

ருக்கிறாங்க என்பார். பிணத்தை சமாதிகளை உடைச்சு வெளியில் எடுக்கிறாங்க என்று நாயகம் பதில் சொல்வார். தமிழரசுக் கட்சியில் சேர் உன்னை எம்பியாக்கிறேன் என்று கிங்பாமசி முதலாளி பாலனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் பாலனுக்கு தேர்தலில் நம்பிக்கை இருக்கவில்லை. துப்பாக்கிக் குழலில் இருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்ற எழுத்தாளர் டானியலின் விவாதங்கள்தான் பாலனுக்கு அதிகம் ஈடுபாடாக இருந்தது. யாழ்ப்பானத்தில் இருக்கும் போது மாலையானால் அடிக்கடி வெலிங்டன் திரை அரங்க சந்தியில் இருந்த டானியல் அண்ணரின் கடைச்சல் பட்டறையில் போயிருந்து அரசியல் அரட்டை அடிக்கிறதுதான் அவனது முக்கிய பொழுதுபோக்காக இருந்தது. பாலையடியில் விதானையாரைத் தற்செயலாக கண்டபோது முதற்கேள்வியாக ஏன் விதானையார் வாய்க்காலில் தண்ணீர் ஓடுது என்றுதான் பாலன் கேட்டான். அவரோ தன்னுடைய வழமையான பாணியில் குளமா தண்ணி தேங்கி நிக்க. வாய்காலில் தண்ணீர் ஓடத்தானே செய்யும் என்று கிண்டல் செய்தார். பின்னர் சிறு போகத்துக்கு தண்ணீர் திறந்திருக்கு என்றார். சிறு போகமா, மல்லாவிப் பக்கம் வயலெல்லாம் வரண்டுபோய் மாடுகள் செத்துக்கிடக்கு விதானையார், என்று அவநம்பிக்கையோடு சொன்ன பாலன் தொடர்ந்து நீங்கள் சிறுபோக நெல்லுக்குத் தண்ணிபாயுதென்றியள் என்று ஆச்சரியப் பட்டான். வவுனிக்குளத்தில் அந்தள்வுக்குத் தண்ணீர் இல்லை. மல்லாவி ஆக்கள் எல்லாரும் குளக்கட்டுக்குப் பக்க வயல்களிலதான் பங்கு போட்டு விதைச்சிருக்கினம்.

ஓ பாலன் புரிந்து கொண்டான். சுந்தரலிங்கம் என்ன செய்கிறான். அவன் கூட்டுறவுச் சங்கத் தலைவராய் வந்தது சந்தோசம் என்று பாலன் சொன்னபோது. விதானையாரின் முகம் மலர்ந்தது. சந்தோசமாய் இருக்கு பாலன் என்றார் விதனையார். சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்து விவசாயிகளின் ஆதரவோட வென்றிருக்கிறான். இதெல்லாம் முந்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில சாத்தியமே இல்லை. என்று சொன்னபோது கால மாற்றங்கள் தொடர்பான நம்பிக்கை அவரிடமிருந்து வெளிப்பட்டது. நாங்கள் சின்னனாய் இருந்த காலத்தில கண்ட யாழ்ப்பாணத்தார் வேற. நீங்கள் வேற. ஆனாலும் யாழ்ப்பானத்துப் பெரிய மனிசர் இன்னும் மாறேல்ல.

உண்மைதான் என்று பாலன் ஒத்துக் கொண்டான். ஏன் தமிழரை ஒற்றுமைப் படுத்த வெளிக்கிட்ட தமிழர் கூட்டணிக்குள்ளயும் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு இழுபறி இருக்கே பரமநாதனுக்குச் சங்கடமாக இருந்தது. என்ன அமிர்தலிங்கம் ராசதுரை பிரச்சினையைச் சொல்லிறியா. அதெல்லாம் உங்க கொம்யூனிஸ்டு தோழர்கள் கிளப்பிற புரளி பாலன் என்று பரமநாதன் ஆத்திரப்பட்டார். பாலன் சிரித்தான். நீங்கள் தமிழர் கூட்டணியை ஆதரிக்கிறது சரிதான் விதானையார். ஆனால் தலைமையின் யாழ்ப்பாணத்து உயர்சாதி நிலை பாட்டை ஆதரிக்கிறதுதான் பிழை விதானையார். என்ற போது பாலனின் கம்யூனிஸ்ட் கட்சித் தொடர்புகள்தான் விதானையாரின் கண்களுக்குத் தெரிந்தது. இதை கம்யூனிஸ்ட்டு சூழ்ச்சி என்று சொல்ல வந்தவர் அதை விட்டுவிட்டு நீ சொல்லுறது சரிதான் பாலன். ஆனா அதை வெளியில தமிழற்ற எதிரியளோட நிண்டு எதிரி மாதிரிச் சொல்லிறதுதான் பிழை. உங்க கம்யூன்ஸ்ட்டுகள் தேர்தல் வெறிக்காய் சிங்கள இனவாதிகளோட தேர்தல் உடன்பாட்டுக்குப்போகாமல் ரஸ்யா மாதிரி பெடறல் ஆட்சிக்குப் போரடியிருந்தா நாங்களும் ஆதரிச்சிருப்பமல்லா? பாலனால் பதில் சொல்ல முடியவில்லை. சுந்தரலிங்கத்தைக் கேட்டதாச் சொல்லுங்க என்றபடி விடைபெற முயன்றான். பாலன் கிணற்றைச் சுற்றியுள்ள நிலத்தில் நீர் இறைத்து புகையிலை, வெங்காயம், மிளகாய் திராட்சையென்று பணப் பயிர்த் தோட்டம் செய்கிற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். அவனுக்கு வன்னி விவசாய நடைமுறைகள் பற்றி அதிகம் தெரியாது. வவுனிக்குளம் போன்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வன்னி மக்களைவிட அதிகமாக யாழ்ப்பாணத்து ஏழை விவசாயிகள்தான் குடிவந்திருந்தார்கள். நெல் விவசாயத்தை அவர்கள் வன்னி மக்களிடமிருந்தும் நவீன விவசாய முறைகளில் இருந்தும் கற்றுக் கொண்டார்கள். ஆனால் வளவுதோறும் கிணறும் கிணற்றைச் சுற்றித் தோட்டமும் தோட்டத்தில் பணம் காய்க்கிற செடிகளும் என்கிற யாழ்ப்பாணத்து வாழ்வியலை அந்த நிலமற்ற யாழ்ப்பாணத்து விவசாயிகளால் நிலமும் நீரும் பெற்றுக் குடியேறிய வன்னியில் ஊருவாக்க முடிந்தது. வன்னி மக்களும் மேட்டு நிலத்தில் கிணறுவெட்டி பணத் தோட்டம் செய்ய இளையவரை தொடர்ந்து வற்ப்புறுத்திக் கல்விகற்பிக்கிறதையும் யாழ்ப்பாணத்து விவசாயிகளைப் பார்த்துப் பழகினார்கள். முன்னர் அதிகாரம் செய்யவும் சுரண்டவும் வந்த யாழ்ப்பாணத்து மேலோர்களையும் வியாபாரிகளையும் போலல்லாது புதிதாக வந்த யாழ்ப்பாணத்து ஏழை விவசாயிகள் வன்னி மண்ணில் வாழ வந்தவர்கள். வழமையான யாழ்ப்பாணத்து ஆதிக்கப் போக்குகளும் சாதியும் ஏழைகளான அவர்களிடம் ஆழமாக வேரூன்றி இருக்கவில்லை. எல்லோருக்கும் சம அளவு நில உடமை கிடைத்திருந்த நிலையில் மாற்றங்கள் சாத்தியமாகி இருந்தது.





**தொடர்ந்து பாயும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நெருப்பு நரி

தமிழ் நெஞ்சன்

**ஒருவர்** ஒரு வேலையை மிக விரைவாகச் செய்தால் அதை நெருப்பு மாதிரி செய்கிறார் என்போம். இணையத்தளங்களில் இருந்து ஒலி ஒளி புகைப்படங்கள் போன்றவற்றை தரவிறக்கவோ (Download) இணையேற்றவோ (Upload) செய்வதற்கு உதவி செய்கிறது - Firefox Universal Uploader என்கின்ற மென்பொருள். இது பயன்படுத்துவதற்கு மிகவும் எளிமையான கருவியாக உள்ளது.

Box.net, Flicker,picasa, Youtube, Facebook, webshots, omnidrive, Smugmug, SmeStorage, Goole Doss போன்ற இணையத் தளங்களில் இருந்து கோப்புகளை (Fils) ஏற்றிஇறக்க இந்த Fire Foxd Addon உதவுகிறது.

ஒரே நேரத்தில் எத்தனை கோப்புகளை வேண்டுமா னாலும் இதி ல் தரவேற்ற லாம். பல் வேறு தளங் களுக்கும் Up load/ Dow load செய்வதற்கு இந்த ஒரே ஒரு நீட்சியையே பயன்படுத்தலாம்.






https://addons.mozilla.org/en-US/firefox/addon/4724

## ஒளிந்திருக்கும் வைரஸை கண்டுபிடிக்கும் மென்பொருள்




இதன்வழியுடாக செல்வதன் மூலம் இந்த மென்பொருளை உங்கள் கணனியில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் இணையத்தில் எத்தனையோ நன்மை பயக்கும் தளங்கள் இருந்தாலும் தீமை விளைவிக்கக் கூடிய தளங்களும் அதிகமாக இருப்பதைக் காண்கின்றோம். அத்தகைய தீமை விளைவிக்கும் தளங்கள் என்ன செய்கின்றன?

தீமை விளைவிக்கக் கூடிய தளங்களைப் பார்வையிடுபவர்களின் கணினியில் குற்றம் விளைவிக்கும் நிரல்களை ஏவி விடுகின்றன. இந்த நிரல்கள் அமைதியாக இருப்பது போல பாவனை செய்யும். நமக்கும் இப்படி ஒரு நச்சு நிரல் நம் கணினியில் இருக்கிறதா என்பதே தெரிந்திருக்காது. கணினியின் மூலம் நாம் செய்யும் இணையப் பணப்பரிமாற்ற நடவடிக்கைகளையும் கடனட்டை விபரங்களையும் இந்த நச்சுநிரல் கவனித்து அது குறித்த தகவல்களை எதிராளிக்கு (நிரலை ஏவியவருக்கு) அனுப்பிவிடும்.

வைரஸ் எதிர்ப்பான்களோ கூட இவைபோன்ற தளங்களைப் பல வேளைகளில் கவனிக்கத் தவறிவிடுகின்றன. நாமும் எப்போதாவது தான் வைரஸ் எதிர்ப்பானின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துகிறோம். அடிக்கடி மேம்படுத்திக் கொண்டிருந்தால் பிரச்சினை இல்லை. இதில் ஏராளமான சட்டச் சிக்கல்கள் வேறு உள்ளன. எத்தனையோ பேர் இன்னும் வைரஸ் எதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்ப்பான்களைக் கூட தமது கணினியில் நிறுவாமல் கூட இருக்கலாம். அல்லது பழைய பதிப்பையே இன்னும் வைத்துக்கொண்டு கணினி பாதுகாப்பாய் இருப்பதாக தமக்குத் தாமே கற்பனை செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

சர்ச்சைக்குறிய அல்லது தடை செய்யப்பட்ட தளங்களைப் பார்வையிடாமல் தடுக்க நெருப்பு நரி மென்பொருள் உதவுகின்றது. அதன் பாதுகாப்புத்தன்மையை மேலும் அதிகரிக்க உதவும் ஒரு நீட்சிதான் WOT.


இந்த FireFox Addon(நீட்சி)யை நிறுவிவிட்டால் உலகில் உள்ள 20 மில்லியன் தளங்களைப் பற்றிய பாதுகாப்பு விபரங்களை அது அறியத்தருகிறது. ஏதேனும் ஒரு தளத்தை நீங்கள் பார்வையிட முயற்சிக்கும்போது பச்சை, மஞ்சள், சிவப்பு நிறங்களின் மூலம் எச்சரிக்கை செய்துவிடும்.




கூகிள் போன்ற தேடுதல்வேட்டை முடிவுகளை அறிவிக்கும் தேடியந்திரங்களின் அறிக்கைகளிலும் நச்சுநிரல்களைப் பரப்பக்கூடிய தளங்களும் இடம்பெற்று இருக்கின்றன. தேடுதல் அறிக்கை வெளியாகும்போதே பச்சை மஞ்சள் சிவப்பு நிறங்களில் தளத்தைப் பற்றிய மேலதிகத் தகவ ல்களையும் WOT உடன் இலவச இணைப்பாகத் தருகிறது.

சிறுவர்கள் பார்க்கக்கூடாத நம்பகமில்லாத தளங்கள் போன்றவற்றை இந்த நீட்சியின் மூலம்






முன்கூட்டியே அறிந்திட முடியும். அடிக்கடி இணைய பாதுகாவலனின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள். ஆகவே மேற்கூறிய விடையங்களை நினைவில் வைத்து உடனடியாக WOT ஐ நிறுவிக் கொள்ளுங்கள்.

https;//addons.mozilla.org/en-US/firefox/addon/3456 என்ற தளத்திற்குச் சென்று நிறுவிக் கொள்வதன் மூலம் எமது கணனியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம்.

இங்கே பயன்படுத்தப்பட்ட கலைச் சொற்கள்

நெருப்பு நரி : Fire Fox Browser
பாதுகாப்புத்தன்மை : Security
கெடுதி விளைவிப்பவை :malware
நிரல்கள் :programs
இணையப் பணப்பரிமாற்ற நடவடிக்கை : Money Transaction On Net
கடனட்டை : Credit Card
வைரசு எதிரப்பான் : Anti Virus
வைரசுஎதிரப்பானின் பாதுகாப்பு அம்சங்கள் : Security Updates
பழைய பதிப்பு : Older Version
நீட்சி : Add-On
தேடியந்திரம் : Search Engine
இணையப்பாதுகாவலன் : Internet Security
WOT : Web Of Trust





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருநல் நினைவுகள்

# ஆசிரியர் கலாசாலையும் அன்றைய பயிற்சியும்

கவிஞர் திமிலைத் துமிலன்

அந்தக்குரலுக்குச் சொந்தக்காரர் வேற ஆரமில்ல. ஆசிரியர் கலாசாலை விடுதி மேற்பார்வையாளர் தான். அவருட பேர் ராசதுரையெண்டு புறகு தெரிய வந்தது. ஒரு கணம் நான் ஆடிப் போனன். எண்டாலும் றங்குப்பெட்டியோட போய் விறாந்தையில ஏறி வரிசையில நிண்டன். ஒவ்வொருத்தராக உள்ளுக்கு கூப்பிட்டார். விடுதியில தங்கிறத்துக்குக் கொண்டு வர வேண்டிய சாமானெல்லாம் சரியா எண்டு, பொட்டியத் தொறந்து ஒவ்வொண்டாக எடுத்துக் காட்டினன். எல்லாம் சரி. ஆனா சாலுவையில ஒண்டு கொறைஞ்சி போச்சி போட்டாரே. ஒரு சத்தம்! திடுக்கிட்டுப் போனன்.

"எத்தனை சாலுவை கொண்டு வரவேணும் தெரியாதா?"

"வேட்டி நாலு சாலுவ நாலு.."

"வேட்டியக் கேக்க ஏலாலது, சாலுவ ஒண்டு கொறையிது. கேக்க ஏலாது. போ கொண்டு வா" கத்தினார். வேறு வழியில்ல நான் சயிக்கிளில வந்தது நல்லதாப் போச்சி சயிக்கிள எடுத்து கடைக்குப் போய், ஒரு சாலுவை வாங்கிவந்து காட்டின புறகுதான் விடுதியில சேர்த்துக் கொண்டார்.



விடுதிக்கு வாற பிள்ளையளோட அவர் இப்படி ஏன் நடக்கிறார்? அது அவருட ஒரு உத்தியெண்டு புறகு தெரிஞ்சிது. ஆரம்பத்தில, கறாராக கடுமையாக நடந்தாத்தான் பயிற்சிக்காலம் முழுக்க கட்டுப்பாட்டுக்குள் வச்சிக்கலாமாம். காலம் போகப் போகப் அவருட குணம் தெரிய வந்தது. "கிருஷ்ணா, கிருஷ்ணா" வெண்டு அன்பாகக் கூப்புடுவார். மாணவராக மாறிப்போனார்.



அவருட நிருவாகத்தைப் பொறுத்து கறார்ப் பேர் வழி தான். அதினால சில மாணவருக்கு அவரப்புடிக்காது. தாறுமாறாக அவரப் பத்தி பேசியவர்களுமுண்டு. ஆனா அவரை நேராக எதிர்க்க எல்லாருக்கும் பயம்.

நான் ஆசிரியர் கலாசாலைக்குப் போன காலத்தில அதிபராயிருந்தவர் திரு கனகலிங்கம், யாழ்ப்பாணத்தவர். கட்டையாக, கறுப்பாக இரிப்பார். அவருக்கும் ராசதுரைக்கும் சரியான நெருக்கம். அந்த நெருக்கம் கலாசாலை நிருவாகத்தை குட்டிச் சுவராக்கு தெண்டு சில விரிவுரையாளருக்கு வெறுப்பு. கனகலிங்கத்தார் ராசதுரையருட சொல்லுக்கு ஆடறரெண்டு பேச்சி. இதில முக்கியமானவர் அப்ப உப அதிபராயிருந்த திரு திரு ஞானசம்பந்தர், அவர் வெள்ளையானவர், உயரமானவர், தலையில கொஞ்சம் வழுக்கை. அவர் விரிவுரைக்கு வந்தா இதபத்தியெல்லாம் பட்டும் படாமலும் பேசாத நாளேயில்ல. மூக்கை ஒரு வகையாச் சுழிச்சி, சிரிச்சிச்சு சிரிச்சிச்சு கதைப்பார். அவர் கல்வியியல் பாடம் படிப்பிச்சவர். எண்டு நினைக்கிறன். அவருட கருத்துக்குச் சார்பானவர். அப்ப விஞ்ஞானம் படிப்பிச்ச வேலுப்பிள்ளை. அவரும் உயரமானவர் தலையை ஆட்டி ஆட்டிக் கதைப்பார். இப்படி ஆசியர் கலாசாலை விரிவுரையாளருக்குள்ள ரெண்டு கட்சி. ஒண்டு அதிபருக்கு சார்பானது. மற்றது அவருக்கு எதிரானது. இது போல மாணவருக்குள்ளயும் கட்சி வேறுபாடு கலாசாலைப் பாரம்பரியமாகத் தொடர்வதாக் கூடச் சொல்லலாம். இந்த ரெண்டிலயும் சாராத நடுநிலையானவர்களும் இருந்தாங்க. குறிப்பாக தங்கத்துரையரைச் சொல்லலாம். அவர் கணிதமும் சித்திரமும் படிப்பிச்சவர். கறுப்பான உயரமானவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவும் செழிப்பான சிரிச்சமுகம், பகிடி விடுறதில கெட்டிக்காறர். விரிவுரையாளர்களில ஆரைப்புடிக்கும் எண்டு கேட்டா, நான் முதலில அவரத்தான் சொல்லுவன். என்ட திறமைய புரிஞ்சு கொண்டமுதலாவது மனிசர் அவர்தான். இப்பவும் அவரை நான் அடிக்கடி நினைக்கிறதுண்டு. மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிலே அதன் வரலாற்றிலே சிறப்பக்கண்காட்சி ஒண்டு நடந்ததெண்டா அது நான் படிச்ச காலம்தான். என்னை அதில ஈடுபடுத்த தூண்டுதலாகவிருந்து, முழுக்க முழுக்க காரணமாக இருந்தவர் தங்கத்துரைதான். அதை விபரமாகப் புறகு சொல்லுறன். தங்கத்துரையாருக்கு அடுத்தபடியாக என்ட திறமையக் கண்டறிஞ்சி, என்னை நல்லாகப் பயன்படுத்தியவர் உடற்பயிற்சிப் போதனாசிரியர், திரு தியாகராசா. அவர் சாண்டோ சங்கரதாஸிட மகன்.



இண்டையப் போல அண்டைய ஆசிரியர் பயிற்சி இரிக்கல்ல. அப்ப பல குறைபாடுகள் இருந்ததாகப் பேசப்பட்டாலும் நிறைவான பயிற்சி அண்டு கிடைச்சதெண்டுதான் நான் சொல்லுவன். விடிய வெள்ளண்ண அஞ்சரை மணிக்கே கல்லடியிருந்து தியாகராசா சயிக்கிளில வந்திடுவார். வாரிச் சுறுட்டி எழும்பி எல்லாரும் உடற்பயிற்சிக்கு ஓடுவம், பொட்டையளும்தான். அவர்களுட உடற்பயிற்சியாசிரியர், மிஸ் தாமோதரம் அவ ஆங்கிலமும் படிப்பிச்சா.



அது பத்தியும் புறகு பேசுவம். தியாகராசா மாஸ்டர் ஏழு மணிவரையும் கசக்கிப் புழிஞ்சி எடுத்துப் போடுவார். புறகு குளிச்சி புறப்பட்டு சாப்பிட்டுத்து வகுப்புக்குப் போகோணும். அண்டைய சீருடை இப்பத்தையப் போலில்ல. எப்படியெண்டு தெரியுமா? அது முழுக்க முழுக்க தமிழ்க் கலாசாரத்தை பிரிதிபலிச்சிது. ஆண்கள் வேட்டி, வாலாமணி, சால்வை. பெண்கள் வெள்ளைச்சேலை, ரவுக்கை. அந்தச் சீருடை, தமிழ் ஆசிரியர்களுக்கு ஒரு தனித்துவக் குறியீடாக இருந்திச்சி. உள்ளத்தில புனிதம் இருந்திச்சோ இல்லையோ வெளில அது புனிதத்தைப் பளிச்சிட்டது. ஆசிரியப் பயிற்சியாளர் பொடியன் பொட்டையள் வரிசையாகப் போனா வெள்ளைக் கொக்குச் சீரொழுங்கு கண் கொள்ளாக் காட்சி. மனத்தில ஒரு தனித்துவ ஒரு புனித எழுச்சி. இண்டைக்கு? எல்லாம் போச்சிது! நாம முழுசாக இங்கிலிஸ் இனமாக மாறிப் போனம். ! ஆனா தோலை மட்டும் மாத்த முடியல்லையே! 'பிளாஸ்ரிக் சேயறி' செய்து தோலையும் மாத்திப் போட்டமெண்டா சோக்குத்தான்!



**இந்தச்
சீத்துவத்திலதான் இன
உரிமைக்காகத் தமிழன்
போராடு றான்!
அதுவும் ஒண்டு
சேந்தில்ல, ஓராயிரம்
இயக்கங்களாகப்
பிரிஞ்சி நீண்டு
போராடுறான்.**

நீங்க சொல்லலாம், சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளாத உயிரி காலகதியில அழிஞ்சிபோகும்.” மாற்றம் நாள்தோறும் நடக்குது. நாங்களும் மாறத்தான் வேணும்” சரிதான், யப்பானியச் சனங்களைப் பாருங்கோ, சிங்களச் சனங்களைப் பாருங்கோ, சில சந்தர்ப்பத்திலயாவது அந்தச்சனங்கள் தங்கட கலாசார உடையத்தானே உடுக்குதுகள். நாம என்ன செய்யிறம்?

தமிழன் தனித்துவச் சிறப்புக்கு இன்னும் ஒண்டையும் நாம சிந்திக்கலாம். தமிழன் ஒற்றுமையாகப் போராடி தமிழீழம் மலர்ந்திட்டுது எண்டு வச்சிக் கொள்ளுவம். காசித்தாளெல்லாம் நாங்களே அச்சிடுறம் எண்டும் வச்சிக்கொள்ளுவம் அந்த நிலத்துக்குப் பொறுப்பான தமிழ்த் தலைவன் எந்த மொழியில கையொப்பம் வைப்பான்? நிச்சயமாக அது தமிழில இரிக்காது. ஆங்கிலமாகத்தான் இரிக்கும். இந்த இடத்தில சிங்களவன் என்ன செய்யிறான்? காசித்தாள்களை எடுத்துப் பாருங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சீத்துவத்திலதான் இன உரிமைக்காகத் தமிழன் போராடுறான்! அதுவும் ஒண்டு சேந்தில்ல, ஓராயிரம் இயக்கங்களாகப் பிரிஞ்சி நிண்டு போராடுறான். கடைசியில போய் ஒட்டிக்கொண்டு, கலடியை நக்கிக் கழுவி, தன்ட இனத்தையே காட்டிக் குடுத்து அழிச்சிக்கொண்டு சுயநலச் சுகபோகம் அனுபவிக்கிறான்! இதுதான் தமிழன்ட மகத்துவமான பாரம்பரியம்!

ஆசிரியர் கலாசாலைச் சீருடையில துவங்க? எங்கோ நழுவிப்போறம் போல கிடக்கு! இது மற்றென்று விரித்தல் என்ட வழுநிலைதான்! மன்னியுங்கோ!!

தியாகராசா மாஸ்டருட உடற்பயிற்சி முடிய, குளிச்சிச் சாப்பிட்டுப் போட்டு எட்டு மணிக்கு வகுப்புக்குப் போனா ஓய்வேயில்ல. இரவு 10 மணிக்கு ரெண்டாவது சுய கற்றல் முடிஞ்சிதான் நித்திரைக்குப் போவம். அதுக்கிடையில் விடுதி மேற்பார்வையாளருட கண்ணுல மண்ணத் தூவிப்போட்டு செக்கன் சோ சினிமாவுக்குப் போறதுமுண்டு ஒரு நாள் அச்சொட்டாக மாட்டிக் கொண்டம் எப்படித் தெரியுமா?

**நினைவு மலரும்...**





# இப்பிடிச் சொல்லினம்!




இருபத்தைந்தாவது பதிப்பைத் தாண்டி நடை போடும் "இருக்கிறம்" இதற்கு எமது இதயபூர்வமான வாழ்த்துகள். உமது பதிப்பின் தரம் மெருகேறிக்கொண்டே செல்கிறது வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன் வளர்க தரமுடன்.

ஜெயச்சந்திரன்
வத்தளை

'இருக்கிறம்' சஞ்சிகை நின்றுபோய்விட்டதாக இங்கொரு கதை. வழமையாக வாங்கும் நூல் நிலையத்தில் போய்க் கேட்டாலும் அதே கதைதான். ஆனாலும் 'இருக்கிறம் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை அண்மையில்தான் அறிந்தேன். மண்டூர்த் தீர்த்தத்துக்குப் போன நண்பர் ஒருவர் மூன்று நூல்களை வாங்கிப் புரட்டி போது என்டைய கவிதையைப் பார்த்து விட்டு வந்து எனக்குச் சொன்னார். இப்போதுதான் மனதுக்கு திருப்தி .இருக்கிறம் சஞ்சிகைக்கு மட்டக்களப்பு பகுதியில் விளம்பரம் போதாதென்று நினைக்கிறேன். தயவுசெய்து கவனத்திலெடுக்கவும்.

செ. குணரத்தினம்

நானும் இருக்கிறம் சஞ்சிகையை வாசித்து வருகிறேன். யாழ்ப்பாணத்தில் இருப்பதால் மிகவும் தாமதமாகவும் கிடைக்கிறது. கடந்த நாட்களில் இருக்கிறம் எனது கவிதைகள் சிலவற்றை பிரசுரித்திருக்கிறது. ஒரு ஜனரஞ்சிக சஞ்சிகை போலாகிவிடக் கூடாது. என நினைக்கிறேன். சனாங்களின் இருப்பை குறித்து எமக்குரிய வடிவத்தில் பேசுவதின் தேவை இருக்கிறது.
எமக்குரிய ரஞ்சகம் தேவைப்படுகிறது.

தீபச்செல்வன்.
கிளிநொச்சி

"இருக்கிறம்" எனும் சஞ்சிகையினைப் படித்த மகிழ்ச்சியில் எழுதுகிறேன். பகுதி பகுதியான ஒவ்வொரு கலைப்படைப்பும் அளவளவாக மிகவும் அழகாக வடிவமைக்கப்படுள்ளன. குற்றெழுத்துக்களாக காகத்தை பதித்துள்ளீர்கள். அது ஒரு குறியீடு என நான் எண்ணுகின்றேன். ஆம் ஒற்றுமையாக இருக்கிறம். சுத்தமாக இருக்கிறம் என்பதை உணர்த்துவதாக நான் உணர்கிறேன்.

சி. உதயகுமார்
வல்வெட்டித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைச் சந்தையில் கிட்னி

தாமரை

விற்பனையைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பலசரக்குக்கடை தொடங்கி மருந்துக் கடை வரை பொருள் விற்கும் கடைகள் உண்டு. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான காய்கறி, பூ, கீரை, துணிமணிகள் என விற்கும் பெண்களை பார்த்திருக்கிறோம். குடும்பச் சூழல் காரணமாக உடலில் உள்ள 'கிட்னி' என்ற முக்கியமான உறுப்பை விற்கும் பெண்களைப் பற்றி இப்பொழுது தான் கேள்விப்படுகின்றோம். மனிதாபிமான அடிப்படையில் ஒருவரின் உயிர் காக்க கிட்னி கொடுப்பதில் தவறில்லை. வறுமைக்காக இடைத் தரகர்களின் மூலமாக இது ஒரு வியாபாரம் என்ற ரீதியில் நடந்து வருவதுதான் நம்மை அதிர வைக்கிறது. நமது நாட்டில் இது வரைக்கும் இந்த வகை வியாபாரம் தொற்றாமலிருந்தாலும். தாய் நாடான இந்தியாவிலேயே இது கொடிகட்டிப் பறக்கின்றது.

சிறுநீரகத்தை விற்பதற்காக சென்னையிலுள்ள மருத்துவமனையொன்றில் காத்திருக்கின்ற ஏழை விவசாயி ஒருவர் இவ்வாறு தெரிவிக்கின்றார். "இது உங்களுக்கு மோசடியாக தெரியலாம் ஆனால் அந்த அளவு மோசமானதல்ல. ஒரு குடும்பம் பட்டினியால் வாடுது. இன்னொருவருக்கு உயிர்வாழ கிட்னி அவசியம். இது வியாபாரம்



இல்லைஎன்று புரிந்து கொள்ளுங்கள் ஒருத்தர் இன்னொருத்தருக்கு செய்யும் உதவி அவ்வளவுதான். பணமில்லாமல் பட்டினியால் சாகிறவனும் பணமிருந்தும் வாரம் நான்கு முறை டையாலிசிஸ் பண்ணும் ஒருவரும் சேர்ந்து ஒருத்தருக்கு ஒருத்தர் உதவிசெய்யிறாங்க. இரண்டு பேரையும் காப்பாற்றுகிறோம்" என்கிறார்.

இந்தியாவிலேயே சிறுநீரக மாற்று அறுவை மருத்துவத்தில் முதல் இடம் பிடிக்கும் மையமாக சென்னை விளங்குகிறது. சில லட்சம் ரூபாய்களை செலவளித்தால் சிறுநீரகங்களை சென்னையில் எளிதாக பெற்றுவிடலாம் என்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சந்தையை பற்றி அறிந்த பலர். அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் சேர்ந்து அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துகொண்டால் மட்டும் போதுமானது. மற்ற எல்லாவற்றையும் தரகர்கள் கவனிப்பார்கள். கடந்த சில ஆண்டுகளில் சென்னை மற்றும் மதுரையில் மட்டும் இலங்கை, நேபாளம், வட இந்தியாவை சேர்ந்தவர்கள் சுமார் 50 பேர் சிறுநீரக மாற்று அறுவை மருத்துவம் செய்துள்ளனர். அதிகமான சிறுநீரக மாற்று அறுவை மருத்துவம் செய்யும் மருத்துவமனைகளாக அப்பலோ மருத்துவமனை, மதுரை மீனாட்சி மருத்துவமனை, காளியப்பா மருத்துவமனை, தேவகி மருத்துவமனை,



போன்றவற்றின் பெயர்கள் இடம் பெறுகிறன. சில மருத்துவமனைகளில் சிறுநீரகம் உட்பட மாற்று அறுவை மருத்துவத்திற்கு 5 லட்சம் வசூலிக்கப்படுகிறது என சுகாதாரத் துறை செய்தி ஒன்று தெகல்கா இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளது.

வறுமையின் கொடுமை தாங்காமல் பல ஏழைத் தாய்மார் வாடகைத் தாயாகவும், தங்களுடைய சிறுநீரகத்தை விற்பனை செய்பவர்களாகவும் துணிகிறார்கள். வறுமை கொடூரமாக வருத்த, கடன்பழு நசுக்க, தமது உடலின் அங்கங்களையே சொத்தாக மாற்றி பணவருவாய்க்கான வழியாகப் பயன்படுத்தத் தயங்காமலிருப்பதே ஆகக் கொடுமையாகும்.

இதில் முற்றுமுழுதாக ஏமாறுபவர்கள் படிப்பறிவில்லாத ஏழைகளே!

அவர்களுக்கு சிறுநீரகம் (கிட்னி) என்றால் என்ன? அது மனித உடலின் எப்பாகத்திலுள்ளது? அதன் முக்கியத்துவமென்ன என்பதைப் பற்றி ஆழமான அறிவு இல்லை. கையிலுள்ள காப்பையோ கழுத்தில் அணிந்துள்ள சங்கிலியையோ கழற்றிக் கொடுப்பது போல சிறுநீரகத்தில் ஒன்றை கொடுத்து தமது அவசரத்துக்கான பணத்தை பெற்று பிரச்சினையைத் தீர்த்து நிம்மதியாக



வாழ்வோம் என்று ஆசைப்படுகிறார்கள்.

இவர்களுடைய பணத்தேவையையும் பயன்படுத்தி பணம் பறிப்பதற்கென்றும் ஒரு கோஷ்டி இயங்கிவருகின்றது. பாவம்! இந்த ஏழைகளின் வறுமையை, அறியாமையை இச்சந்தைப்படுத்தும் புரோக்கர்களின் மூலதனம் கடன் சுமை அழுத்தத்தால் நசிந்து சாகும் மக்களுக்கு சிறுநீரக விற்பனை ஒரு விடியல். எனவே கண், மண் பாராமல் ஏமாற்றும் புரோக்கர்களின் மோச வலையில் வீழ்ந்து துன்ப துயரங்களுக்கும் வருத்தங்களுக்கும் இவர்கள் ஆளாகிறார்கள்.

சிறு நீரகத்தைப் பெற்றாவது ஒரு தொகைப் பணத்தைப் பெற்று தம் வறுமையைப் போக்குவதுடன் பிள்ளைகளின் கல்வி திருமணம் என்பவற்றையும் கவனிக்கலாம் என்ற பேரவாவில் "கிட்னிச்" சந்தையில் தம்மை விற்பனைப் பொருளாக்குகின்றனர்.

இதற்கான புரோக்கர்கள் சிறிதும் ஈவிரக்கமின்றி கிட்னியை விற்றுப் பணம் பெற்றால் அதை வைத்து வானில் பறக்கலாம், கப்பல் விடலாம் என்றெல்லாம் ஆசை காட்டி தம் வலைக்குள் இவர்களை வீழ்த்துகின்றார்கள்.

சிறுநீரகத்தைத் தானம் செய்பவரின் கஷ்ட, நஷ்டங்களையெல்லாம் நீக்குவதோடு, எதிர்காலத்தில் எல்லா விஷயங்களுக்கும் உதவியாக இருப்போம் என்ற இவர்களின் பசப்பு வார்த்தைகளை முற்று முழுதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியே ஏமாறுகிறார்கள். அன்பாகவும் கருணை பொங்கவும் கதைத்து தானம் செய்பவர் சந்தேகமுறாதவாறு நடித்து கையொப்பங்களையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

தென்னகத்தின் ஒரு சிறுநீரகத்துக்கு 1,50,000 ரூபா அல்லது 2,00,000 இலட்சம் தருவதாகவும் உறுதியளிப்பர். உபசாரங்கள் கவனிப்புக்கள் எல்லாம் சத்திரசிகிச்சை செய்து சிறுநீரகத்தை எடுக்கும் வரை தான். இவையெல்லாம் நடந்து முடிந்த பின் நீ யாரோ, நான் யாரோ என்ற போக்குத்தான்.பணமாக 40,000 ஆயிரம் மாத்திரமே. அதுவும் பல தடங்கலுக்குப்பின் கொடுத்துக் கைகழுவி விட்டுவிடுவதே இயல்பாகி விட்டது. மேற்கொண்டு பணம் தர வேண்டும் என வற்புறுத்தினால், ஆஸ்பத்தரி, சத்திரசிகிச்சை, மருந்து என்பவற்றுக்கே பணம் செலவாகி விட்டது. அவற்றை யார் கணக்கில் போடுவது? எனவே இந்த நாற்பதாயிரம் மட்டும் தான் தானம் செய்பவருக்கென்று விளக்கம் வேறு.

பலவீனம், உடல்வலிமை போதாமை, மேற்கொண்டு சில வியாதிகளின் தலைகாட்டல் என்பவற்றினால் ஒடிந்து போன இந்த ஏழை மக்கள் சிறுதொகையாவது கிடைத்துள்ளதே என்ற ஆறுதலுடன் மேற்கொண்டு எதுவித நடவடிக்



கைகளும் எடுக்க முடியாத சூழலில் நலிந்து போய் பிச்சை வேண்டாம் "நாயைப்பிடி" என்ற நிலையில் அழுதிருக்கிறார்கள்.

தமது பணத்தேவைக்காக மட்டுமல்ல, பிற உயிரின் கஷ்டங்களை நிவர்த்திக்க தன்னுயிரைக் கொடுத்து இத்தகைய தானத்தை செய்ய முன் வரும் இவ்வுயிர் ஈனும் வள்ளல்களுக்கு மருத்துவ உலகமே முன் வந்து நல்ல பாதுகாப்பும் அவர்களது பிரச்சினைகள் தீரவும் உதவி புரிந்து இச்சந்தையைச் சீராக்க வேண்டும். இது மிக அவசரமும் அவசியமுமானதாகும். சமுதாயத்தின் கொடுமையான இந்தப் பிரச்சனைக்கு எதிர்காலத்தில் ஒரு விடிவு காலம் ஏற்படுமா?



# பெண்களிடம் ஆண்கள் பரவசமடையும் தருணங்கள்

சந்தோஷத்திலோ அல்லது துக்கத்திலோ காதலி தன்னுடைய தோள்களில் சாயும் பொழுது தனக்கு ஏற்றவள் இவள் தான் என்று ஆண்கள் உணர்வார்கள்.

தன் காதலி முத்தமிடும் அந்த தருணங்களில் தன்னைச் சுற்றி உலகத்தில் நடப்பவை அனைத்துமே சரியானதுதான் என்று ஆண்கள் உணர்கிறார்கள்.




சில நேரங்களில் தன் காதலி வாக்குவாதம் செய்து கோபப்படும் பொழுது தன் காதலியின் அழகை ரசிப்பார்கள்.

காதலர்கள் இருவருக்குள்ளும் பெரிய சண்டை ஏற்பட்டுவிட்டு பிரிந்து சென்று சில நிமிடங்கள் கழித்து தன் காதலி போன் செய்யும் போது அவளுடைய பெயர் தன் செல் போனில் வரும்போது...

ஆண்கள் தன் காதலி விரும்பும் ஒரு விஷயத்தை செய்து அவர்களை சந்தோஷப்படுத்தும் போது அந்த சந்தோஷத்தில் தன் காதலி தருகின்ற முத்தத்தின் போதும்...

நீங்கள் விரும்பாத ஒரு காரியத்தை உங்க காதலி செய்துவிட்டு அது சாதாரண விஷயமாகவே இருந்தாலும் பின்பு அதற்காக உங்களிடம் வந்து மன்னிப்பு கேட்கும் பொழுதும்....

எதிர்பாராத விதமாக நீங்கள் அவரை பிரியும் பொழுதும் அல்லது காதலி உங்களை பிரியும் பொழுதும்

மிக முக்கியமாக... காதலியின் நறுமணத்தை நுகரும் பொழுது அது ஷாம்பு வாசனையாக இருந்தாலும் சரி.. நுகரும் போதும் ஆண்கள் பரவசமடைகிறார்கள்.

- தார்மீகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**ட்ராய்** என்னும் நகரம் இன்னும் புராதனமானது. அது பண்டைய கிரேக்கர்களால் நிறுவப்பட்டது. தற்கால துருக்கியில் இருந்தது. மிகப் பெரிய மதில்களுடனும் சிறந்த போர்வீரர்களுடனும் பலத்த பாதுகாப்புச் சாதனங்களுடன் அது விளங்கியது. அதன் இளவரசனான பாரிஸ். ஏதென்ஸ் மன்னனாகிய மெனலேயஸின் மனைவியாகிய உலகப்பேரழகி ஹெலனை அசத்தி அழுத்திக்கொண்டு ட்ராய்க்குப் போய்விட்டான். மெனலேயஸின் அண்ணன்காரன் அகமெம்னான்



ஸ்பாரட்டாவின் மன்னன். ஆகவே அக்கம்பக்கத்து கிரேக்க நாடுகளிலிருந்தெல்லாம் ஆட்களைத் திரட்டிக் கொண்டு ஆயிரம் கப்பல்களில் ட்ராயைத் தாக்குவதற்குப் புறப்பட்டான். பெரிய பெரிய மாவீரர்களெல்லாம் அந்தப் படையில் இருந்தனர்.ட்ராயுடன் போர் நிகழ்ந்தது. இருபுறமும் சேதம்.பன்னிரண்டு ஆண்டுகள் போர் நடந்தது.

இந்தக் காலகட்டத்துக்குள் ஹெலன் கிழடு தட்டிப்போனாளா என்பது தெரியவில்லை. Fat Forty Female என்று இந்தக் காலத்தில் சொல்லப்படுவதுபோல "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்" என்பார்கள். ஆனால் பாரஸின் மோகம் பன்னிரண்டு வருடங்கள் இருந்திருக்கிறது.

கிரேக்கர்களின் பெருவீரனும் யாராலும் வெல்லப்பட முடியாதவனுமாகிய அக்கிலீஸ் பாரிஸால் கொல்லப்பட்டுவிட்டான். அக்கிலீஸின் மரமஸ்தானத்தில் அம்பு எய்து கொன்றான். ட்ராய் நகரை வெல்லவே முடியாது என்ற நிலை ஏற்பட்டதும் கிரேக்கநாடுகளின் மன்னர்களில் ஒருவனாகிய ஓடீஸியஸ் ஒரு சூழ்ச்சியைச் செய்தான். ஒரு பெரிய மரக்குதிரையைச் செய்து அதற்குள் கிரேக்க கொமாண்டோக்களை இருக்கச் செய்து ட்ராய்க்காரர்களின்



# ஸ்பாட்டாகுஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்குரிய கப்பமாக அதைக் கோட்டை வாசலில் விட்டுவிட்டு கிரேக்கர்கள் சென்றனர். அதாவது கடலுக்குள் சில மைல்கள் சென்று மறைந்து நின்றனர்.இரவில் மீண்டும் வந்தனர். அதற்குள் குதிரையை ட்ராயர்கள் நகருக்குள் எடுத்துச்சென்றனர். நடுச்சாமத்தில் கிரேக்கக் கொமாண்டோக்கள் குதிரையிலிருந்து வெளிவந்து கோட்டை வாசலைத் திறந்துவிட்டனர். இரவில் நடந்த குழப்பத்தில் ட்ராய் வீழ்ச்சியுற்றது. பாரிஸைக் கொன்று ஹெலனை அழைத்துக்கொண்டு கிரேக்கரகள் திரும்பினர். ட்ராய் மக்கள் அனைவரையும் கொன்றுவிட்டு நகரத்துக்கு நெருப்பிட்டுவிட்டுச் சென்றனர். ட்ராய் மன்னனின் மகளும் அவளுடைய கணவனும் அவர்களின் பணியாட்கள் சிலரும் ரகசியப் பாதை வழியாகத் தப்பிச் சென்று இத்தாலியை அடைந்தனர். அங்கு அனைவரும் இறந்து போயினர். இறப்பதற்கு முன்னால் ட்ராய் மன்னனின் மகள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுப்போட்டு விட்டாள். அந்தக் குழந்தைகள் அழுது கொண்டு பரிதவிப்பதை அங்கிருந்த ஓர் ஓநாய் பார்த்தது. தன்னுடைய குட்டிகளுடன் அந்தக் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்தது. அங்கிருந்த காவலர்களால் கண்டெடுக்கப்பட்ட ரோமுலுஸ் ரேமுஸ் என்ற அந்த சகோதரர்கள் பெரியவர்கள் ஆனபிறகு அங்கு ஏற்கனவே இருந்த எட்ருஸ்கர என்னும் இனத்தவரை ஒழித்துக்கட்டிவிட்டு தாங்களே அரசர்களாயினர். மூத்தவனாகிய ரோமுலுஸின் பெயரால் மிகப் பெரிய மிகப் பாதுகாப்பான மாநகரம் ஒன்றை நிறுவினார்கள். அதன் பெயர்தான் ரோமா Roma.



ஆரம்பத்தில் அரசாக இருந்த ரோமாபுரி ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ட்ரையும் விரேட் என்னும் மூவர் குழுவால் ஆளப்பட்டுவந்தது. ரோமாபுரி மிகப் பெரியதாக ஆனபிறகு அங்குள்ளவர்கள் ஏராளமான அடிமைகளை வைத்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்த மக்களைவிட அடிமைகளே மிக அதிகம். ஒரு கால கட்டத்தில் ஸ்பாரட்டாக்குஸ் என்னும் போர்வீரன் ஒருவன் இருந்தான். அவனுக்கும் அவனுடைய மேலதிகாரிகளுக்கும் ஒத்துவரவில்லை. ஆகவே படையை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டான். அக்காலத்தில் படையை விட்டுச்செல்வது மிகப் பெரும் குற்றமாகக் கருதப்பட்டது.



அனாதையாக இங்கும் அங்குமாக அலைந்து கொண்டும் அவ்வப்போது ஏதாவது கொள்ளைக்கூட்டத்துடன் சேர்ந்து கொள்ளையடித்துக் கொண்டும் இருந்தான். ஒருநாள் அவனை ரோமாபுரிப் படையினர பிடித்துவிட்டனர். அவனை உடனேயே ஓர் அடிமையாக விற்றுவிட்டனர்.

அப்போதெல்லாம் போர்விளையாட்டுகள் பந்தயங்கள் சண்டைகள் முதலியவை மக்களின் கேளிக்கைக்காக நடைபெற்றன. Circus Contests என்றெல்லாம் பெயர் பெற்ற இவற்றில் ரத்தக்களரியுடன் போர்வெறியுடன் பந்தயங்களும் சண்டைகளும் நடந்தன. ஓர்அடிமை தன்னை இந்த மாதிரியான போர்ப் பந்தயங்களில் பங்குபெறுமாறு தன்னையே விற்றுக்கொள்ளலாம். அல்லது விற்கப்பட்ட பின்னர்அந்தத் தொழிலுக்குச் செல்லமுடியும். இப்படிப்பட்ட போரியல் அடிமைகளை Gladinators என்பார்கள். இவர்களுக்கு நல்ல சாப்பாடு வசதியான இருக்கைகள் பெண் போகம் மது பானம் சண்டையில் வென்றால் பந்தயத்தொகை போன்றவை கிடைக்கும். குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் பரிசுத்தொகை ஊதியம் ஆகியவற்றுடன் விடுதலை செய்யப்படுவார்கள். Free man என்ற அந்தஸ்துடன் அவர்கள் செல்வார்கள். அத்துடன் அவர்களுக்கு நிலமும் வழங்கப்படும். ரோமாபுரிப் பிரஜா உரிமையும் கொடுக்கப்படும்.

ஆனால் அதுவரைக்கும் உயிருடன் இருக்கவேண்டுமே. ஆகவே ஆயிரக்கணக்கில் கிலேடியேட்டர்கள் இருந்தனர். ஸ்பாட்டாகஸ் அடிமையாக விற்கப்பட்டபின்னர் தப்பிச் சென்றுவிட்டான். அவனைச் சிறைப் படுத்தியபின்னர் அவனை கிலேடியேட்டராக ஆக்கிவிட்டார்கள். அவனும் தன்னுடைய திறமையால் கிலேடியேட்டர்களின் பயிற்சிப் பள்ளிக்குத் தளபதி ஆகினான். கிமு முதலாம் நூற்றாண்டில் அவனும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட நூறு அடிமைகள் க்லேடியேட்டர்கள் ஆகியோரும் தப்பிச்சென்று இத்தாலியின் மிகப் பெரிய எரிமலையாகிய வெஸவியஸ் மலையைக் கைப்பற்றிக் கொண்டனர்.

அங்கிருந்துகொண்டு அடிமைகளின் புரட்சி ஒன்றை ஸ்பாட்டாகுஸ் பிரகடனப்படுத்தினான். விரைவில் 1 லட்சம் பேர் அந்தப் புரட்சியில் சேரர்ந்தனர். ஸ்பாட்டகஸின் அடிமைகள் கூட்டம் பெரும்பாலும் வெறும் கூட்டம்தான். உழைக்கத் தெரியும். ஆனால் போர்ப்பயிற்சி அவர்களில் மிகப் பெரும்பாலோருக்குக் கிடையாது. அவர்களில் சிலர் இத்தாலியை விட்டே வெளியேறி வேறுநாடுகளில் குடியேறி உழைத்து சுதந்திரமாக வாழலாம் என்று எண்ணினர். பெரும்பாலானோர இத்தாலியிலேயே இருந்துகொண்டு பெருங்கூட்டமாகச் சென்று ரோமாபுரியின் அனைத்து நகரங்களையும் கொள்ளையடித்து வாழலாம் என்று விரும்பினர். அவர்களுக்கும் ஸ்பாட்டாகுஸைத் தவிர ஒருங்கிணைந்த தலைமைத்துவம் கிடையாது. இருப்பினும் ரோமாபுரியின் படைகள் பலவற்றை அவர்கள் வென்றனர். கடைசியில் மார்க்கஸ் க்ராஸஸ் என்னும் தளபதியின் தலைமையில் ஒரு திறமையான படை அனுப்பப்பட்டது. ஸ்பாட்டாகுஸின் அடிமைப்படையில் பெரும் பகுதி க்ராஸஸின் அணிவகுப்பை உடைத்துக்கொண்டு இத்தாலியின் தென்பகுதிக்குச் சென்றுவிட்டது. அங்கிருந்து ஸிஸிலித் தீவுக்குச் செல்ல நினைத்தனர். ஆனால் தப்பிச் செல்ல கப்பல்கள் கிடைக்கவில்லை.


ஆகவே அடிமைப்படை சிதறிச் சிறு கூட்டங்களாக இங்கும் அங்குமாய் ஒடியது. சிறுகச் சிறுக ரோமாபுரிப் படையினர் அந்தக் கூட்டங்களைத் தனிமைப்படுத்தி சுற்றி வளைத்துப் பிடித்துக்கொண்டனர் அவர்கள் அனைவரையும் நூறுமைல்





தூரத்துக்கு அப்பியன் பெருவழி என்னும் ரோமாபுரியின் முக்கிய பாதையின் இருமருங்கிலும் சிலுவைகளில் அறைந்தனர். ஸ்பாட்டகுஸ்ம் பிடிபட்டுவிட்டான். ஆனால் க்ராஸஸ் அவனுக்கு மட்டும் ஒரு நிபந்தனையிட்டான். கிராஸஸ் அவனை ரோமாபுரியின் முக்கியமான 'ஸரக்கஸ்' எனப்படும் மைதானத்துக்குக் கொண்டுவந்தான். ஸ்பாடாகுஸ் உடன் அவனுடைய ஒரே மகனும் பிடிபட்டிருந்தான்.

ரோமாபுரி மக்களையும், அதிகாரிகள், தளபதிகள், அனைவரையும் கூட்டிவைத்து அவன் ஸ்பாட்டாகுஸிடம் தன் நிபந்தனையைச் சொன்னான். ஸ்பாட்டாகுஸம் அவன் மகனும் போரிடவேண்டும். யாராவது ஒருவர் சாகும்வரையில் சண்டையிடவேண்டும். யார் போரில் வென்று உயிருடன் இருக்கிறாரோ அவன் சித்திரவதை செய்யப்பட்டு சிலுவையில் அறையப்படுவான். இதுதான் நிபந்தனை. பாவம் ஸ்பாட்டாகுஸ் ஒரே மகன். அவனுக்காக தன்னுடைய வாழ்நாளில் எதுவுமே செய்யமுடிந்ததில்லை. அவனுக்காகத் தன்னுடைய உயிரைத்தான் கொடுக்கலாம். ஆனால் அதுவும் முடியாது. ஸ்பாட்டாகுஸ் இறந்தால் மகன்காரனைச் சிலுவையில் அறைவார்கள். அதை ஸ்பாட்டாகுஸால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவ்வாறுதான் ஸ்பாட்டாகுஸ் எண்ணுவான் என்பது கிராஸஸக்கு நன்கு தெரியும். ஆனால் மகன்காரனுக்கும் இதே திக்கில்தான் எண்ணங்கள் ஒடின. தன் தந்தை சித்திரவதைக்கு ஆளாகி சிலுவையில் அறையப்படுவதை அவன் சற்றும் விரும்பவில்லை. போர் தொடங்கியது. தந்தையும் மகனும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருந்த அளவுகடந்த பாசத்தால் கொலை வெறியுடன் போரிட்டனர். வெகு நேரம் போர் நடந்தது. இளைஞனாகிய மகன்காரனுக்குப் பயிற்சி குறைவு. ஆகவே சற்றுச்சளைத்தான். ஸ்பாட்டாகுஸ் தாமதிக்கவில்லை. தன் மகனுடைய உடலில் கத்தியை வெகுவேகமாகப் பாய்ச்சி தன் மகன் இறந்துபோனதை நிச்சயப்படுத்திக் கொண்டு எழுந்து நின்றான். பின்னர் க்ராஸஸ் ஸ்பாட்டாகுஸை உயரமான சிலுவையில் அறைந்து அப்பியன் பெருவழியில் நிறுவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பூமியதிர்ச்சியை முன்னறிவிக்க முடியும் என்கிறது நாசா

பூமியதிர்ச்சியை முன்னறிவிக்கக் கூடிய தொழில் நுட்பத்தை கண்டறிவதில் தாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

விண்ணில் சஞ்சரிக்கும் செயற்கைக் கோள்களின் துணையுடன் பூமியின் வளிமண்லடத்தில் உள்ள அயன் படையில் (iHbHËere) நிகழும் குழப்பங்களை அவதானிப்பதன் அடிப்படையில் பூமி அதிர்ச்சியை எதிர்வு கூற முடியும் என்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பூமி அதிர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் வளிமண்டலத்தில் உள்ள அயன்படையில் பாரிய குழப்பங்கள் நிகழ்வது தொடர்சியாக நாசா விஞ்ஞானிகளால் அவதானிக்கப்பட்டு வந்திருக்கிறது. கடந்த வருடம் சீனாவில் நிகழ்ந்த பூமியதிர்ச்சிக்கு முன்னரும் கூட வளிமண்டல அயன்படையில் முன்னர் அவதானிக்கப்பட்டது போன்ற குழப்பங்கள் நிகழ்ந்திருந்தன என்று அவர்கள் தாங்கள் திரட்டிய தரவுகளை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளனர்.

புவியோட்டில் உள்ள பாறைப்படைகளில் ஏற்படும் மின் அழுத்த மாற்றங்கள் வளிமண்டல அயன்படையில் தூண்டும் குழப்பங்களுக்கும் அவற்றைத் தொடர்ந்து ஏற்படும் பூமி அதிர்ச்சிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பது அவதானிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே நாசா விஞ்ஞானிகள் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஏது எப்படியோ பூமி அதிர்ச்சியை எதிர்வு கூறும் தொழில்நுட்பம் வளர்ந்தால் பூமியதிர்சியால் ஏற்படும் மனிதப் பேரவலங்கள் தடுக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பதை நிச்சியமாகக் கூறலாம்.

**எம். தயாபரன்**







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிறந்த குழந்தை அழாமல் இருக்கிறதா?

சிம்சன்



பிறந்த குழந்தைக்கு உடல் நிலையில் ஒரு சில பிரச்சினைகள் ஏற்படும்போது அவைகள் அழுவதில்லை மாறாக ஒரு சில அசைவுகளை மட்டுமே செய்கின்றன என்கிறது ஒரு ஆய்வு. அண்மையில் அமெரிக்காவல் நிகழ்த்தப்பட்ட ஒரு ஆய்வின் முலமே இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில பிறந்த குழந்தைகள் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் வலியையும் ஒரு சில அசைவுகளின் மூலமே வெளிப்படுத்துகின்றனவே தவிர அழுவதில்லை என்கிறது அந்த ஆய்வு.

எனவே அழுதால் மட்டுமே குழந்தைக்கு ஏதேனும் பிரச்சினை என்றில்லாமல் வித்தியாசமாக அவர்களது உடலை வளைத்தாலோ அசைத்தாலோ அங்கு ஏதோ பிரச்சினை இருக்கிறது என்பதை பெற்றவர்கள் உணர வேண்டும். இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளப் பட்ட 12 குழந்தைகளில் ஒரு சில குழந்தைகள் உடலில் வலி ஏற்படும் போது அழாமல் உடல் அசைவு களைத் தான் வெளிப்படுத்துகிறன. இதனை அவர்களது மூளை திறனில் ஏற்படும் மாற்றத்தை வைத்துத்தான் மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதனால் அக் குழந்தைகளுக்கு எந்த மாதிரியான பிரச்சினை ஏற்பட்டிருக்கும் என்பதை கண்டறிவது மருத்துவர்களுக்கு சிரமமான விஷயமாகி விடுகிறது என்கிறார்கள் ஆய்வில் ஈடுபட்ட மருத்துவர்கள்.

ரிபெக்கா ஸ்லாட்டர் என்ற பெண் மருத்துவரின் தலைமையின் கீழ் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கு எங்கு வலி ஏற்படுகிறது என்பதை கண்டறியும் கருவிகளும் இதுபோன்ற குழந்தைகளுக்கு ஏற்படும் வலிகளைக் கண்டுபிடிக்க தவறுகிறது என்று இந்தப் பெண் மருத்துவர் தெரிவிக்கிறார். மருத்துவமனைகளில் இருக்கும் குறைமாதக் குழந்தைகளும் பிறந்து ஒரு சில நாட்களே ஆன குழந்தைகளும் அழுவது என்பது வலி ஏற்படுவதன் வெளிப்பாடாக இருப்பதில்லை. இதுவரை குழந்தை அழுதால் அதற்கு உடலில் ஏதேனும் வலி இருக்கும் என்ற அடிப்படையில்தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆய்வின் மூலம் அக்குழந்தைக்கு ஏற்பட்டிருக்கும் உடல் அசதி பசி காய்ச்சல் போன்ற அசௌகரியங்களும் காரணமாக இருக்கும் என்ற அடிப்படையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது தற் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் அழாமல் இருக்கும் குழந்தைகளுக்கு எந்த பிரச்சினையும் இருப்பதில்லை என்பதும் தவறானது. எப்போதும் ஒரே மாதிரியான அசைவுகளையும் கை, காலையோ தூக்கியபடியே அல்லது அசைக்க மறுக்கும் போது அந்த குழந்தைக்கு ஏதோ பிரச்சினை இருக்கும் என்பதையும் கவனிக்க வேண்டியதாகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறி மாறிய தோட்டா

**டெலிபோன்** மணி ஒலித்தது. றிசீவரை எடுத்த செம்சன் காதில் வைத்து விட்டு மேசையின் மறு பக்கம் அமர்ந்திருந்த தொம்சனிடம் "அழைப்பு உனக்குத்தான்" என்று கூறியபடி அவரிடம் நீட்டினார். அதைப் பெற்றுக் கொண்ட தொம்சன் "ஹலோ தொம்சன் பேசுகிறேன்" என்றார்.

அவரது மகன் ஜெக்சனின் குரல் ஒலித்தது. "போர் முனைக்கு போகும் படி கட்டளை வந்திருக்கிறது. உடனடியாகவே புறப்படுகிறேன். அங்கே சென்ற பின் தொடர்பு கொள்கிறேன்".என்று " நல்லது - வாழ்த்துக்கள், ஆண்டவர் உன்னை ஆசிர்வதிப்பாராக" என்று கூறி றிசீவரை வைத்தார் தொம்சன். அதைக் கவனமாக செவியுற்ற செம்சன், எதையோ நினைவூட்டுபவராக, "இந்த யுத்தம் மட்டும் இல்லையென்றால் நமது தொழில் -அது தான் இந்த ஆயுத உற்பத்தி தொழில் முன்னேறாமல் அப்படியே படுத்துக் கொண்டு விடும். மறந்துவிடாதே" என்று கூறி கலகலவென வாய்விட்டுச் சிரித்தார்.

அதை ஆமோதிப்பவர்போல் தொம்சன் கூறினார், "யுத்தம் நிற்கப் போவதில்லை, ஓரிடத்தில் நின்றால் இன்னோரிடத்தில் தலை தூக்கிவிடும். யுத்தம் ஏற்படுவதற்கான காரணம் ஒழிந்தால் தானே யுத்தம் ஒழிய முடியும்" என்று கூறியவர் தொடர்ந்து "இதில் வேடிக்கை என்னவென்றால் அமைதியைத் தோற்றுவிக்க வேண்டியவர்களே சில இடங்களில் தூண்டுகோலாகவும் இருந்து விடுவதுதான்" என்றார்.

> **"யுத்தம் நிற்கப்போவதில்லை. ஓரிடத்தில் நின்றால் இன்னோரிடத்தில் தலை தூக்கிவிடும். யுத்தம் ஏற்படுவதற்கான காரணம் ஒழிந்தால் தானே யுத்தம் ஒழிய முடியும்"**

நண்பகல் 12 மணி என்பதை சுவர்க் கடிகாரம் ஒலித்துக் காட்டி நின்றது. நண்பர்கள் இருவரும் இருந்த இடங்களிலிருந்து எழுந்தார்கள். காரியாலய வாசலில் காத்திருந்த தத்தமது கார்களில் ஏறி அமர்ந்தார்கள். கார்கள் அவர்களின் வீடுகளை நோக்கி வெவ்வேறு திசைகளில் பறந்தன.

உலகில் பிரசித்தமான ஆயுத உற்பத்தி நிறுவனம் அவர்களுடையது. 'தொம்சன் அன் செம்சன் கொம்பனி' என்பது அதன் பெயர். குண்டுகள், தோட்டக்கள், துப்பாக்கிகள், ரவைகள், சிறு ஆயுதங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்வது அதன் பணி - நாட்டின் அரசாங்க தேவைகளுக்கு மட்டுமன்றி அரச அனுமதியுடன் பிறநாட்டு முகவர்களுக்கு விநியோகிப்பதிலும் இக்கம்பனி முதன்மை வகித்து வந்தது. உலகின் பிரதான நகரங்கள் பலவற்றிலும் 'தொம்சன் அன் செம்சன்' கம்பனிக்கு கிளை முகவர்கள் செயற்பட்டு வந்தார்கள். இந்த வகையில் இக்கம்பனி கோடி கோடியாக பணம் சம்பாதித்து குவித்தது. நாட்டுக்கும் பல கோடி மதிப்புள்ள வெளிநாட்டு செலாவணியை தருவித்து கொடுத்தது.

இந்நிறுவனத்தின் கட்டடங்களும் பணிமனைகளும் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் அமைந்திருந்தன. நிறுவனத்தின் செயற்பாடுகள் யாவும் நவீன தொழில்நுட்ப மயமாக்கப்பட்டிருந்தன என்பதைச் சொல்லத் தேவையில்லை.

நிறுவனத்தில் ஒரு நிகழ்ச்சி நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளிப்புறப்பூங்காவில் அதிகாரிகளும், நிர்வாகிகளும் குழுமி இருந்தனர். விழா நாயகர்களான தொம்சனும் செம்சனும் அவ்விடத்திற்கு குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் இலக்கு ஒன்று குறிக்கப்பட்டிருந்தது அலுவலர் ஒருவர் அவர்களுக்கு அருகில் வந்து அந்த இலக்கினை சுட்டிக் காட்டினார். பின்னர் நவீன துப்பாக்கி ஒன்றினை கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்து ஏதோ கூறிவிட்டு புன்னகையுடன் விலகிக் கொண்டார்.

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்தனர். பிறகு தொம்சன் ஓர் இளைஞனுக்குரிய மிடுக்குடன் துப்பாக்கியைக் கையில் ஏந்தினார். அருகில் மேசையொன்றின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிறு பெட்டிகளில் ஒன்றிலிருந்து சிலதோட்டாக்களை எடுத்தார். அதில் ஒன்றை துப்பாக்கியில் செலுத்திப் பூட்டினார். பின்னர், தூரத்தில் குறிக்கப்பட்டிருந்த இலக்கை நோக்கி துப்பாக்கியை குறி வைத்தார்.

செம்சன் உட்பட குழுமியிருந்த அனைவரும் அவர் செய்கையை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர் தொம்சன் சடுதியாகத் துப்பாக்கியைத் தலைக்கு நேர் மேலே திருப்பிச் சுட்டார். அந்த சமயத்தில் வானத்தில் பறந்து சென்று கொண்டிருந்த பறவையொன்று குண்டடிபட்டு அவர்களுக்கருகிலேயே வந்து விழுந்தது. பறவையைக் கையில் எடுத்து பார்த்தார் தொம்சன். பறவையின் உடம்பில் குண்டு துளைத்திருந்த இடத்தையும் அது வெளியேயிருந்த இடத்தையும் செம்சனுக்குச் சுட்டிக் காட்டினார். பிறகு ஒரு புன்முறவலுடன் "பார்த்தாயா எவ்வளவு துல்லியமாக இந்தப்பறவையைச் சுட்டு வீழ்த்தினேன் என்று" எனக் கூறிவிட்டு சிரித்தார்.

பறவையைக் கீழே போட்டுவிட்டு சற்றுத்தூரத்தில் நிலத்தில் கிடந்த தோட்டா முனையை கையில் எடுத்து மிகக் கவனமாகப் பரிசோதித்த தொம்ஸன், அதனை நண்பரிடம் காட்டினார். இருவரும் தலையசைத்து திருப்திப்பட்டுக் கொண்டார்கள். தோட்டா முனையில் அப்படி என்ன விசேஷம் என்றால் இலக்கை அடிப்பதல்ல முக்கியம். அடித்த பிறகும் அது சிதைவுறாமல் இருக்கிறதா என்பதே இப்போதைய சோதனையின் நோக்கம்.

தமது பணிமனைக்குத் திரும்பிய அவர்கள் அலுவலகப் பிரிவில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். பல விடயங்கள் பற்றியும் பேசிக்கொண்டிருந்தவர்களின் பேச்சு தொம்சனின் புதல்வர் ஜெக்சன் பற்றி திரும்பியது. இராணுவத்தில் ஜெக்சனுக்கு பதவி உயர்வு கிடைத்திருப்பது பற்றி நண்பரிடம் கூறி மகிழ்ச்சியடைந்தார் தொம்சன். அதே வேளை ஜெக்சன் தொடர்ந்தும் இராணுவத்தில் இருப்பது தமக்கு விருப்பம் இல்லையென்றும் தெரிவித்தார்.

"இப்பொழுது மேஜர் பதவியில் இருக்கும் ஜெக்சன் இன்னும் திறமையுடன் பணியாற்றினால் அதற்கும் மேலான பதவிகளில் அமர முடியும். அப்படி இருக்க உனக்கு என்ன நஷ்டம்" என்று கேட்டார் தொம்சன். "எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை". நான் நினைக்கிறேன், சேவைக் காலம் முடிவுற்றதும் தொடர்ந்து இருக்காமல் அவன் இங்கே வந்து எனது இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டால் நான் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். அத்துடன் நோய் வாய்ப்பட்டிருக்கும் மனைவிக்கும் ஆறுதலாய் இருக்கும், நானே அருகில் இருந்து அவனை பார்த்துக் கொள்ளலாம்". என்றார் தொம்சன். "நீ சொல்வதும் சரி என்று தான் தோன்றுகிறது. எனக்குத் தான் பிள்ளைகள் இல்லை. என் சகோதரியின் பையனை வந்து வேலைகளைப் பழகும்படி கேட்கலாம் என்று இருக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்" என்று கேட்டார் செம்சன். "அதில் ஒன்றும் தவறில்லை. நமது பொறுப்புகளை இளைஞர்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கிவிட்டால் அவர்கள் முன்னேறிவிடுவார்கள். நாம் சற்று ஒதுங்கியிருந்து வழிகாட்டலாம்" என்று கூறினார் தொம்சன்.

அதே வேளை ரெலிபோன் மணியும் ஒலித்தது. றிசீவரை எடுத்துக் காதில் வைத்து 'ஹலோ' என்றார் தொம்சன். சற்று தயங்கியவர், மீண்டும் 'ஹலோ' என்று கூறியவர் பதற்றத்துடன் "என்ன, என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார். மறுபக்கம் இருந்து வந்த தகவல் என்னவென்று தெரியவில்லை. அவர் முகம் வெளிறியது. பதட்டமுற்றவராய் றிசீவரை மேசைமீது போட்டுவிட்டு கதிரையில் சரிந்து விட்டார்.

சற்றும் எதிர்பாராதவிதமாக தொம்சன் அதிர்ச்சியுற்றுருப்பதை சில நிமிடங்கள் வரை செம்சன் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார். டெலிபோனில் வந்த செய்தி அவரை பெரிதும் உலுக்கிவிட்டிருந்தது என்பது மட்டும் புரிந்தது.

சிறிது நேரத்தில் சுய நினைவுக்கு வந்த தொம்சன் நிமிர்ந்து நண்பரைப் பார்த்தார். கண்களில் பரபரப்பும் வர்ணிக்க முடியாத கலவரமும் தென்பட்டன. உணர்ச்சிகளைப் பெரும் கஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டு கூறினார். "ஜெக்சனுக்கு காயமாம் - பலத்த காயமாம்" அதற்கு மேல் பேச முடியாமல் திணறியவர் குழந்தை போல குலுங்கிக் குலுங்கி அழுதார்.

பலகோடி அமெரிக்கா டொலர்களுக்கு அதிபதியான அவரால் தம் சொத்துக்களுக்கெல்லாம் ஒரே வாரிசான புதல்வனுக்கு போர் முனையில் காயம் ஏற்பட்டு விட்டதை எண்ணியும் பார்க்க முடியவில்லை. சில தினங்களின் பின் ஜெக்சனின் மரணம் பற்றிய செய்தி வந்தது. பின்னர் அப் போர் வீரனின் பூதவுடல் சகல இராணுவ மரியாதைகளுடனும் கொண்டு வரப்பட்டு 'தொம்சன் அன் செம்சன்' நிறுவனத்தின் பூங்காவில் ஓர் இடத்தில் அடக்கம் செய்யப் பட்டது.

மேஜர் ஜெக்சனின் சொந்தப் பாவிப்பில் இருந்த பொருள்கள், ஆவணங்கள் மற்றும் கோப்புகள் யாவும் இராணுவ அதிகாரிகளினால் மிகக்கவனமாகக் கொண்டு வரப்பட்டு தொம்சனின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

தீடிரென எதையோ நினைத்துக் கொண்டவராக தொம்சன் தனது மேல்கோட்டின் உள்பக்கம் கையை நுழைத்து ஒரு சிறு சரையை எடுத்து செம்சனிடம் நீட்டினார். "ஜெக்சனின் பொருள்களில் இந் தத் சரையும் இருந் தது. செயலாளர் கொடுத்தார். நான் பொக்கட்டில் வைத்துக்



கொண்டு மறந்து போனேன் என்றார்.

செம்சன் சரையை வாங்கிப் பிரித்தார். அதிலிருந்த உலோகப் பொருள் பளிச் சென்று தெரிந்தது. தொம்சனும் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு கூர்ந்து கவனித்தார்.

அன்றொரு நாள் குறித்த இலக்கை விடுத்து தலைக்கு மேல பறந்து சென்ற பறவையை சாதுரியமாக அடித்து வீழ்த்திய சம்பவம் அவரின் நினைவுக்கு வந்தது. கூடவே அந்த உலோகத் துண்டில் பொறிக்கப்பட்டிருந்த "தொம்சன் அன் செம்சன் தயாரிப்பு" என்ற ஆங்கில சொற்களும் பளிச்சென்று கண்ணில் பட்டுத் தெறித்தன. மரணித்த புதல்வர் மேஜர் ஜெக்சனின் மார்பிலிருந்து மருத்துவர்களால் வெளியில் எடுக்கப்பட்ட தோட்டா முனை என்ற குறிப்பு நண்பர்கள் இருவரையும் விறைத்து நிற்கச் செய்தது.

- சிபெரு-

# ஒரு நினைவின் பதிவு...



லசந்த விக்கிரமதுங்க

பிறப்பு : ஏப்ரல் 5ஆம் திகதி 1958
இறப்பு : ஜனவரி 8ஆம் திகதி 2009 (வயது51)
துணைவி : சோனாலி சமரசிங்க.
பிள்ளைகள் : அவினாஷ், அகிம்சா, ஆதேஷ்
தொழில் : பத்திரிகை ஆசிரியர் சண்டே லீடர் (ஆங்கிலம்), மோர்னிங் லீடர் (ஆங்கிலம்), இருதின (சிங்களம்), வழக்கறிஞர்
வேறு பெயர் : சுரனிமல
இலட்சியம் : ஜனநாயகம்
சிறப்பு : அரசியல்வாதிகளின் ஊழல்களை அம்பலத்துக்கு கொண்டுவருதல்
பொழுதுபோக்கு : தனக்கெதிரான தாக்குதல்களை சமாளிப்பது
தகைமை : அதிகூடிய துணிச்சல்

## வாழ்க்கைக் குறிப்பு

லசந்தவின் தந்தை ஹரிஸ் விக்கிரமதுங்க கொழும்பு மாநகர சபை உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் பின்னர் இலங்கை சுதந்திரக் கட்சி சார்பிலும் பல ஆண்டுகள் இருந்தவர். மிகவும் இளவயதிலேயே "சன்" பத்திரிகையில் ஒரு செய்தியாளராகச் சேர்ந்து தனது ஊடகத்துறை வாழ்வை ஆரம்பித்தார். 1982 ஆம் ஆண்டில் தி ஐலண்ட் பத்திரிகையில் இணைந்தார். அதே நேரம் அரசியலிலும் தன்னை இணைத்துக் கொண்டார். 1989 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டார். ஆனாலும் அவர் தெரிவு செய்யப்படவில்லை. அதன் பின்னர் அவுஸ்திரேலியா சென்று சிறிது காலம் தங்கிய பின்னர் மீண்டும் இலங்கை திரும்பி 1994 ஆம் ஆண்டில் சண்டே லீடர் பத்திரிகையை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கை ஆழியானின்

# ருத்ர தாண்டவம்

**அதிகாலையே** மாணிக்கராசாவுக்குச் செய்தி வந்துவிட்டது. கந்தோருக்குச் சென்று ஜீப்பை ஸ்ரார்ட் பண்ணி எடுத்துக்கொண்டு போய் கோவிலில் நிறுத்திய போது பூநகரிலிருந்து மன்னாருக்குப் பறப்பட்டுவந்த முதல் பஸ்ஸில் வந்த மகேந்திரன் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தான். பொன்னப்பரின் இரண்டாவது மகன் மகேந்திரன். மாணிக்கராசாவின் மைத்துனன் முறையானவன். மகேந்தரனின் தங்கை பவானியை மாணிக்கராசா காதலித்து வருவதால் அந்த உறவு பலப்பட்டிருந்தது. வெள்ளாங்குளத்தில் சிறியதொரு தேநீர்க்கடையை நடாத்திவரும் மகேந்திரன் பொருட்களை வாங்கச் சிலசமயங்களில் மன்னார் நகரத்துக்கு வருவான். மகேந்திரன் நடாத்தி வருவது தேநீர்க்கடை என்றாலும் அவன் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மன்னாருக்கு வருவது முக்கியமாக இரண்டு சாராயப்போத்தல்களுடன் திரும்புவதற்காகும் என்பது யாவருக்கும் தெரிந்த இரகசியம். அவன் மன்னாரிலிருந்து எப்போது திரும்பி வருவானென வெள்ளாங்குளத்தில் சிலர் விடாயுடன் காத்திருப்பார்கள்.



மகேந்திரனைக்கண்டதும் மாணிக்கராசாவுக்கு வியப்பாக இருந்தது. அதைவிட மகேந்திரன் கொண்டு வந்த செய்தி பேரிடியாகவிருந்தது. பள்ளிக்குப்போன தனசேகரன் நேற்றிலிருந்து வீட்டுக்கு வரவில்லை. அவனைத் தேடிப்போன முரகேசரும் வீட்டுக்குத் திரும்பவில்லை. மச்சான் உன்னை உடனை மைதிலி மச்சாள் ஒருக்கா வரட்டாம். வெகு கஷ்டப்பட்டு லீவு எடுத்துக் கொண்டு அவன் புறப்பட்டான். மாலை கவிழ்ந்து கொண்டிருந்தது. கால நேரம் தெரியாமல் பக்கிள் பறவை ஒன்று அவக் அவக் கெனக் குரல் தந்து கொண்டிருந்தது. தலைவாசல் குந்தில் மைதிலியும் அவளது இரண்டு தங்கைகளும் கவலையோடு அமர்ந்திருந்தனர். முருகேசர் வெளியில் சென்றவர் இன்னமும் திரும்பிவரவில்லை. அவ்விடத்தில் நிலவிய அமைதியை மைதிலி மீண்டும் கலைத்தாள். இஞ்சைபார் மலர் நீங்க அதை வடிவாக் கண்டியளா? கண்டம் அக்கா பாடசாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த எங்கள் அருகில் வான் ஒன்று வந்து திடீரென நிண்டுது. தனசேகரன் அண்ணன் அதில ஏறிப்போனார். விரும்பி ஏறிப்போனானா? பலோத்காரமாக அவனைப் பிடித்து ஏற்றிச்சினமா? சின்னப் பொடியன் அவன் என்று மைதிலி வினவினாள். அந்தக்கிராமத்தில் அடிக்கடி நிகழ்கின்ற சங்கதி தான் நடந்திருக்கின்றது. திடீர்திடீரென இளம் பிள்ளைகளும் இளம் பெண்களும் காணாமல் போய்விடுவார்கள். பெற்றவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக முகாம் முகாமாக ஏறி இறங்குவார்கள். கெஞ்சி விசாரிப்பார்கள். கண்ணீர் வடிப்பார்கள். அப்படி ஒருத்தரும் வரவில்லை. எங்கட காம்ப் ஆக்கள் செய்யவில்லை. எங்கட காம்ப்புக்கு வரவுமில்லை. அதுதான் பொதுவாக அவர்களுக்குச் சொல்லப்படுகின்ற மறுமொழி. தனசேகரன் காணாமல் போன செய்தியைக் கேள்விப்பட்ட முரகேசர் இடிவிழுந்தவர் போலானார். அப்படி நடந்துவிடலாமென்ற பயம் அவருக்கு உள்ளூற இருந்தது. அவருடைய நம்பிக்கை அழிந்து போனது போல இருந்தது. அவருடைய மூன்று தாயில்லாத பெண்களுக்கும் அவருடைய ஆண் பிள்ளைகள் இருவரும் தாம் ஆதரவாக இருப்பார்கள் என நம்பியிருந்தார். அந்தக்கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அப்படிக் காணாமல் போனவர்களின் நினைவுச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகள் இருந்தன. போர் முனை
யில் வீரச்சாவடைந்தார்கள் என்ற
செய்தி வீட்டுக்கு வரும் வரை அவர்
கள் காணாமல் போனவர்களாக
இருந்தார்கள்.

அந்த மண்ணைத் தம்பிடியில்
வைத்திருப்பதற்கு இப்படியான ஆட்
சேர்ப்புகள் அவசியமாகவிருந்தன.
சுற்றிவர இலங்கை இராணுவம் தாக்
கத் தயார் நிலையில் நிற்கும்போது
அப்படையைத் தடுத்து நிறுத்த எதிர்
ப்படை அணி தேவைப்பட்டது. தன
சேகரின் மறைவு அவற்றில் ஒன்றாக
அமைந்து விடுமோ? இரவு படரும்
வரை அவர்கள் மூவரும் தகப்பனை
எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மக
னைத் தேடிப் போனவர் கடு இரவு
வரை வரவில்லை.அரிக்கன் லாந்த
ரைக் கொளு
த்தி வைத்
து விட்டு



நித்திரைக்குப் போகாது காத்திருந்
தனர். பொன்னப்பரும் மகளும் வந்து
ஆறுதல் கூறிவிட்டுச் சென்றனர். நடுச்
சாமம் அளவில் சயிக்கில் ஒன்று வந்து
படலையடியில் நின்றது. நம்பிக்கை
யோடு மைதிலி எழுந்து பார்த்தாள்.
படலையைத்திறந்து கொண்டு வேட்
டைக்காரச்சின்னப்பு தலையை நீட்டி
னார். தங்கச்சி.. முருகேசு ஐயா பூநக
ரிக்குப் போயிட்டு கிளிநொச் சிக்குப்
போறாராம். உங்களைச் சாப் பிட்டு
விட்டுப் படுக்கட்டாம்.வெள்ளா
ங்குளம் சந்தியில் பஸ்ஸிலிருந்து பிற்
பகல் ஒரு மணிபோல இறங்கிய
மாணிக்கராசா தன் வீட்டுக்கு விரை
ந்து வந்தான். குடிமனைக்குப் போகி
ன்ற மண்பாதையில் விரைந்து காளி
அம்மன் கோயிலைக் கடந்தபோது
கோயிலருகில் நின்றிருந்தவர்கள் கவ
லையோடு அவனைப் பார்த்தனர்.
கோயிலடியில் இரண்டு விடயங்கள்
அலசப்பட்டன. ஒன்று முருகேசரின்
மகன் காணாமல் போன விடயம் மற்
றையது அடம்பன் குளத்தின் முறிப்
புகள் சீர்படுத்தப்பட்டு திருத்தப்பட
விருக்கும் சங்கதி. இரண்டாவது விட
யம் வெள்ளாங்குளப் பங்காளர்
களைக் கலக்கிவிட்டது. அடம்
பன்குளத்து வெள்ளம் தான்
வெள்ளாங்குளத்தை நிரப்
புறது. இனி தண்ணி வா
றது தடைப்பட்டிடும்
வெள்ளாண்மை அழிய
வேண்டியது தான். முரு
கேசர் வந்ததும் நாங்க
ஒன்று சேர்ந்து ஜி.ஏ யைச்
சந்திக்க வேண்டியது



தான். ஜி.ஏ யைச்சந்தித்து ஆகிறது
ஒண்டுமில்லை. இங்கத்த அரசியல்
பொறுப்பாளரின்ர காதுகளில் விசய
த்தைப் போட வேண்டியது தான்
என்றார் கந்தையா. அவர் மன்னார்
ஜீ.ஏ யைக்கூப்பிட்டு அவரின் காதுல
போட்டால் சரியாகிவிடும். அதுக்கு
அடம்பன் குளத்துக்காரர் விடுவி
னமே? இங்கத்த பொறுப்பாளர் அங்
கீகரிக்காமல் கச்சேரிக் கூட்டத்தில்
உரிய ஆக்கள் அப்புறூவ் பண்ணியிரு
க்காயினம் விசயம் சரிவரப்புரியா
மல் நடந்திருக்கலாம் நாங்க சரியாக
விளங்கப்படுத்தினால் சரியாகிவி
டும். இன்னமும் வேலை தொடங்க
வில்லை தானே? அதுக்கிடையில்
நாங்க முந்திக்கொள்ளுவம். முதல்
மழையோடு குளத்துக்குத் தண்ணி
வரத் தொடங்கியிருக்குது பார்த்தி
யளே? என்றார் கந்தையா கவலை
யோடு. அவர்களுடைய பேச்சுக்
களை கேட்கும் மனநிலையில் மா
ணிக்கராசா இல்லை. வீட்டுக்கு
விரைந்து வந்தான். அவனைக் கண்
டதும் சகோதரிகள் வீரிட்டுக் கதறி
னர். அவர்கள் இட்ட அழுகுரலில்
பொன்னையா குடும்பமும் அயலவ
ர்களும் அங்கு கூடிவிட்டனர். பவா
னியும் விம்மிவிம்மி அழுதாள்.
முதல் நாள் பிற்பகல் தான் மாணிக்க

**கள்ளம் புகுந்த இளம்
உள்ளங்கள் எப்போதும்
இப்படித்தான். என்ன மச்சான்?
சர்வசாதாரணமாக மைதிலி
கேட்டாள்.**

ராசாவுடன் எவ்வளவு பிரியமாகப்
பேசி மகிழ்ந்தாள். சில மணித்துளி
களாயினும் அவன் எவ்வளவு பிரே
மையுடன் பேசி விடை பெற்றான்.
அதற்குள் இவ்வளவு விரைவில் இப்
படியொரு கவலை படிந்த மாணிக்க
ராசாவை அவள் எதிர்பார்க்கவில்
லை. மிகுந்த துயரத்துடன் அவனைப்
பார்த்தாள். ஆண் மகன் கண்ணீர்
விடலாமா?

விசாரித்துக் கொண்டு வாறன்.
என்று அவன் புறப்பட்டபோது மை
திலி தடுத்தாள். எங்களை விட்டிட்
டுப் போகாதை அண்ணை. எங்களுக்
குப் பயமாக இருக்குது ஐயா விசாரித்
துவிட்டு வரட்டும். என்னபயம் தங்
கச்சி. பக்கத்தில பொன்னையா அம்
மான் இருக்கிறார் தானே? பவானி
யையும் வேணுமெண்டால் கூப்பிட்
டுக் கூட வைச்சிரு அவனை அவர்க
ளால் தடுக்க முடியவில்லை. அன்றி
ரவு முருகேசரின் வீட்டில் மைதிலி
க்கும் தங்கைமாருக்கும் துணையாக
ப் பவானி தங்கநேர்ந்தது. அவர்களு
டன் ஓர் ஆண் துணையாக மகேந்தி
ரன் தான் தங்குவதாகக் கூறி முன்வந்
தான். அன்று நேரகாலத்தோடு தன்
தேநீர்க்கடையை மூடி விட்டு வந்
தான். வழக்கமாக அவன் தன் கடை
யைப் பூட்டுவதற்கு நள்ளிரவாகும்.
இன்று நேரகாலத்தோடு பூட்டிவி
ட்டு வந்தான். உண்மையில் அவனு
க்கு தனசேகரனின் காணாமல்போன
நிகழ்ச்சி துயரத்தைக் கொடுத்திரு
ந்தது. மைதிலி குடும்பத்துக்கு இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி ஒரு துன்பம் நேர்ந்திருக்கக் கூடாது. அரிக்கன் லாந்தரைக் கொளுத்தி தலைவாசல் வளையில் மாட்டியிருந்த கொளுவு கம்பியில் மாட்டிவிட்டாள் மைதிலி. தலைவாசல் வாங்கில் மகேந்திரன் சிகரெட் ஒன்றைப் புகைத்தபடி அமர்ந்திருந்தான். வீட்டு அறைக்குள் பவானியும் மைதிலியின் தங்கைமாரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இரவுச் சாப்பாட்டுக்காக அடுப்பில் பிட்டு அவிந்து கொண்டிருந்தது. அரிக்கன் லாந்தரை வளையில் மாட்டிவிட்டு வீட்டுக்குள் போக மைதிலி திரும்பியபோது கொஞ்சம் நில் மைதிலி. உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும் தம்பி காணாமல் போயிருக்கிற வேளையில நான் இப்ப கதைக்கிறது சரியில்லத் தான் மைதிலி. நானென்ன செய்ய. வேறு சந்தர்ப்பம் வராது. உன்னையும் தனியக் காணமுடியாது. என்றான் மகேந்திரன். இந்த ஆடவன் இவற்றைக் கூறுவதற்கிடையில் மிகுந்த சங்கடப்பட்டான். தலையைக் குனிந்தபடி வாங்கின் விளிம்பை அழுத்திப் பிடித்தபடி கூறி முடித்தான். கள்ளம் புகுந்த இளம் உள்ளங்கள் எப்போதும் இப்படித்தான். என்ன மச்சான்? சர்வசாதாரணமாக மைதிலி கேட்டாள். அந்த ஆடவன் என்ன சொல்வான் என்பதைக்கூட இப்போது அவளால் நினைக்க முடியவில்லை. தனசேகரனும் அவனைத் தேடிச்சென்ற தகப்பனும் தமையனும் தான் நினைவில் நின்றனர். ஒண்டுமில்லை மைதிலி. கெதியில பவானிக்கும் மாணிக்கராசாவுக்கும் கலியாணம் நடந்திடும். அதுக்கென்ன மச்சான்? அதுக்குப் பிறகு நமக்குத் தானே? எங்கையாவது பெண் பார்த்து வைச்சிருக்கிறியளா மச்சான் உன்ன இப்படிக் கேட்டுவிட்டாய் நீ தான் எனக்கு மச்சாள். முறைப்பெண் என்பதை மறந்து விட்டாயா? அவள் சற்றுத் திகைத்துப்போனாள். இரண்டு நாட்களுக்கு முன்பு என்றால் மோகனைச் சந்திக்கு முன் அவள் மகேந்திரனின் கேள்வியால் சஞ்சலமோ சலனமோ பட்டிருக்க மாட்டாள். நேரடியாகவே மறுமொழி சொல்லியிருப்பாள்.

அதுகளை நம்முடைய பெற்றோர் முடிவு செய்யட்டும் மச்சான். எனக்குக் காதலில நம்பிக்கையில்லை. பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக நடக்க விருப்பமில்லை வாழ்க்கையில பெரிதாக எதையாவது சாதிக்கவேணுமாப்போலப் படுகுது. கலியாணம் செய்தல், பிள்ளைகளைப் பெறுதல் அதுக்கு இந்த நாட்டில பலர் இருக்கினம். அவர்களில் ஒருத்தியாக இணைந்திருக்க எனக்கு விருப்பமில்லை மச்சான். எதுக்கும் பெற்றோர் முடிவு செய்யட்டுமன். அடுப்பில புட்டு வேகுது. இருங்க சாப்பாடு தயாரிக்கிறன் தங்கச்சிமார் பசி இருக்க மாட்டினம். என்றபடி அவள் உள்ளே போனாள். அவள் போவதைப் பார்த்தபடி அவன் இருந்தான். இறுக்கமான அவள் பின்னழகு அவனைப் பித்துக்கொள்ள வைத்தது. அவன் எண்ணத்தில் பிடிவாதத்தை ஏற்படுத்தியது. நான்கு நாட்களின் பின்னர் ஏமாற்றத்துடன் முரகேசரும் மாணிக்கராசாவும் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். இவனைப் பயிற்சிக்கு அனுப்பிவிட்டினமாம் தனசேகரனைப்பற்றி இனி பேசி அக்கறைப்படுவதிலும் கவலைப்படுவதிலும் அர்த்தமிருக்கப் போவதில்லை என மைதிலி எண்ணிக்கொண்டாள். அவனை நாட்டுக்காக விட்டுவிட வேண்டியது தான். நாளாந்தம் விமானக்குண்டு வீச்சுக்களினாலும் ஹெலிகளின் பிப்ரிகலிபர் சன்னங்களினாலும் அழிக்கப்படுகின்ற அப்பாவித் தமிழ் மக்கள் எத்தனைபேர்? யாழ்ப்பாணத்தில் இராணுவத்தை நம்பிக் குடியேறிய குமர்ப்பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களில் எத்தனைபேர் செம்மணியில் மண்ணுக்குள் உறங்குகிறார்கள்? தமிழ்ப்பிரதேசங்களில் நித்தம் நிகழும் சூட்டுச் சம்பவங்கள் எத்தனை? தரையில் விழும் மரணங்கள் எத்தனை? போராளிகள் ஒருபக்கம், இராணுவம் ஒரு பக்கம், இடையில் மக்கள் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். போராட்டம் தொடங்கப் பட்டுவிட்டது. இருபக்கத்தாரும் தம் செயல்களை நியாப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். வாழவேண்டிய இளம் வயதில் போராடி அழிந்து கொண்டிருக்கும் ஏழைப்பெற்றோரின் பிள்ளைகள் எத்தனை? ஒரு பக்கம் போராளிகள் ஆக்களைப் போராடச் சேர்க்க மறுபக்கம் இராணுவம் சேர்க்கிறது. மரணிப்பது இளம் பிள்ளைகள். வாழவேண்டிய பிள்ளைகள். இனித்தம்பியை மறந்துவிடவேண்டியதுதான் போல இருக்குது ஐயா என்றாள் மைதிலி.

**அவருடைய நம்பிக்கை அழிந்து போனது போல இருந்தது. அவருடைய மூன்று தாயில்லாத பெண்களுக்கும் அவருடைய ஆண் பிள்ளைகள் இருவரும் தாம் ஆதரவாக இருப்பார்கள் என நம்பியிருந்தார்...**

வீட்டுக்கு ஒருத்தரை அனுப்புங்கோ என்று கேட்டபோது நான் அக்கறை கொள்ளவில்லை. பொத்திப் பொத்தி வைச்சன். இப்ப இழந்திட்டன் போலக்கிடக்குது. என்று முருகேசர் கலங்கினார். போகிற போக்கைப்பார்த்தால் நாங்க எல்லாரும் போக வேண்டுமாப்போலப் படுகுது. என்ற மைதிலியைக் கோபத்துடன் மாணிக்கராசா பார்த்தான். நீ பொடியளுக்குச் சப்போட்டாகக் கதைக்கிறதைப் பார்த்தால் நீயே போராடப் போய் விடுவாய் போலக்கிடக்குது. அந்த துணிச்சல் எனக்கில்லை அண்ணை. என்ரை தாயைத் தின்னி தங்கச்சிமாரைத் தவிக்கவிட்டிட்டு நான் எங்கை போறது? போக மாட்டன். நான் தனியனாகவில்லை. குடும்பப் பொறுப்போடிருக்கிறன். அதுக்குத்தான் தம்பியைத் தான் கொடுத்திட்டமே? மைதிலியின் விழிகள் கலங்கின.

**-தொடரும்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளூர் பொருளாதார ஆட்சி"

**உள்ளூராட்சி** மன்றங்களுக்கு ஆசிய நிலையம் என்ன செய்கின்றது? இந்த உள்ளூர் பொருளாதார ஆட்சித் திட்டத்தின் கருத் திட்டங்கள் எவை? என்பது தொடர்பாக எம்மில் அனைவருக்கு சரியான விளக்கமில்லை. எனவே கிழக்கு மாகாண ஆசிய நிலைய நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எஸ்.ஐ.ரிஷாத் எமக்கு விளக்குகிறார்.

இந்த உள்ளூர் பொருளாதார ஆட்சி (LEG) திட்டத்தின் பிரதான கருத்திட்டங்கள் யாதெனில்

ஒரு பிரதேசத்தின் பொருளாதார சூழலை மேம்படுத்துவதனூடாக வேலை வாய்ப்பினை அதிகரித்தல்

பிரதேச மக்களின் நலன்புரி சேவையினை அதிகரித்தல்



இவற்றினூடாக அரசியல்ஸ்திரத் தன்மையினைப் பேணுதல் ஆகியனவே எமது உயரிய நோக்கமாகும்.

இவ்வாறுஇந்த ஆசிய நிலையமானது கிழக்கு மாகாணம் மட்டுமன்றி மொத்தமாக 4 மாகாணங்களில் 19 உள்ளூராட்சி சபைகளில் இந்த LEG (உள்ளூர் பொருளாதார ஆட்சி) திட்டத்தை மேற்கொள்கின்றது.

இது தவிர மாகாணமட்டத்திலும் இந்த திட்டத்தை மேம்படுத்துவதற்காக செயற்படுகின்றோம். ஏனெனில் உள்ளூராட்சி சபைகளுக்கு மாத்திரம் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது கடினம் இங்கு பார்த்தால் 1980 களில் வழங்கப்பட்ட ஊழியர் தொகை 6 ஆக காணப்படுகின்றது. அதுவே இன்னும் காணப்படுகின்றது. ஆனால் இன்று சனத்தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனை ஒரு மாகாண சபையினால் மாத்திரம்தான் மாற்ற முடியும். இதற்காக ஒரு ஏற்பாடு அவசியம்.

இதனைக் கருத்தில் கொண்டு மாகாணசபை, முதலமைச்சர், CLG, ACLG, நகரசபைத் தலைவர்கள் மற்றும் மாகாணசபைச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட மாகாண ரீதியான ஒரு PPD (Private Public Dialogue) மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பின்பு மாகாண மட்டத்தில் Action Plan தயாரிக்கப்படுகின்றது. ஆனால் இங்கு Working Group என்பதற்குப் பதிலாக Provincial Steering Committee என்பதை உருவாக்குகின்றோம்.



இதனை கடந்த ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி உருவாக்கினோம். அத்துடன் முதலாவது Steering Commitee கலந்துரையாடல் கடந்த 21 -11-2008 இல் நடைபெற்றது. அதில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன் போது கிழக்குமாகாண சபை செயலாளர் முதலில் உள்ளூராட்சி சபைகள் தமது சொந்த செயலில் ஊழியர்களை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். இந்த ஊழியர்களுக்கு தம்முடைய வருமானத்தில் சம்பளம் வழங்குவதை நாம் ஒருபோதும் தடுக்கமாட்டோம் என்றார்.

அதே போல் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் 1980 களில் காணப்பட்ட வரி அறவிடுதல் தான் இன்றும் காணப்படுகின்றது. இது இக்காலத்தைப் பொறுத்தமட்டத்தில் மிகக் குறைந்தளவான தொகையாகவே காணப்படுகின்றது. இது மாநகர சபைக்கோ, நகர சபைக்கோ போதுமான தொகையாக இல்லை. எனவே இதனை மதிப்பீடு செய்வது அவசியம். இதற்கான மதீப்பீட்டு அலுவலகம் குருநாகலையிலும், பதுளையிலும்தான் காணப்படுகின்றது. அவர்களை அழைத்து இந்த மதிப்பீட்டை செய்வதற்கு அவர்கள் சுமார் 10 லட்சம் பணம் கேட்கின்றார்கள். இதற்கு பிரதான காரணம் கிழக்கு மாகாண சபைக்கு அவ்வாறனதொரு காரியாலயம் இல்லாமையே ஆகும்.

ஆகவே கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு சரியான வழிகாட்டல்களை வழங்குவதுடன் மட்டுமன்றி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான உதவி ஒத்தாசைகளை ஆசிய நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

**மொகமட் பஸ்லான்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய பரிமாணம்


இலங்கையில் கொழும்புப் பல்கலைக்கழகமே மிகப் பழமையான பல்கலைக் கழகம் ஆகும். இது ஆரம்பத்தில் இலண்டன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஓர் பல்கலைக் கழகக் கல்லூரியாக இருந்து பின்னர் பல்கலைக் கழகமாக மாறியது. இது குதிரைப்பந்தயத் திடலையும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் உள்வாங்கிக் கொண்டதால் சிங்கள மொழியில் அஸ்வவித்தியாலய என்று நகைச்சுவையாகவும் அழைக்கப்படுகின்றது

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் உருவாக்கப்பட்டு 83 வருடங்கள் கடந்து விட்டன. 83 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் சில வருடங்களாக தமிழ்ச்சங்கம் இயங்கவில்லை. கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் சட்ட பீடத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஒருவர் பெரும் பொருளாளராக பதவியேற்றது முதல் சங்கம் முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

கடந்த மேமாதம் தமிழ்ச்சங்கத்தின் புதிய செயற்குழு பெறுப்பேற்றதிலிருந்து சங்கத்தின் வழமையான பணிகளுடன் புதிய செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை சிறந்ததொரு வளர்ச்சிக்கான அத்திவாரமாகும். அத்துடன் இன்றைய சூழ்நிலையில் குறைந்தளவு தமிழ் மாணவர்களுடன் அதுவும் தலைநகரில் ஒரு தமிழ்சங்கம்






பல்வேறு விதமான செயற்திட்டங்களை தமிழ் மாணவர்களுக்காக செய்துவருவது மிகவும் பாராட்டத்தக்க விடையமாகும். கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் இன்றைய செயற்பாடுகள் தொடர்பாக பல்கலைக்கழ தமிழ்ச்சங்க தலைவர் திவாகரனுடன் தொடர்பு கொண்டபோது பல முக்கியமான விடையங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே முதன் முறையாக மலையக மாணவர்களுக்கு களம் அமைத்து கொடுப்பதற்காக மலையகத்தின் ஏனைய பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து ஹட்டன் ஹலண்டஸ் கல்லூரியில் விவாதம் பொது அறிவுப் போட்டிகளை நடத்தி வருகின்றோம். மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல்கலைக்கழக மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு முன்னுதாரணமாக கொழும்பிலிருந்து அங்கு சென்று இவ்வாறான போட்டிகளை நடத்தினோம். அது போன்றே கிழக்கு மாகாணத்திற்கு சென்று திருகோணமலை கோணேஸ்வரர் இந்து கல்லூரியிலும் முகாம் அமைத்து மாகாணத்தின் ஏனைய பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து மேற்படி போட்டிகளை நடத்தினோம். கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் என்பதற்காக நாங்கள் கொழும்புக்குள் மாத்திரம் நின்று கொண்டு போட்டிகளை நடத்தவில்லை. வடக்கு கிழக்கு மற்றும் மலையக மாணவர்கள் இங்கு கல்வி பயில்வதனால் அவ்வாறான ஒரு புதிய திட்டத்தை எமது சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது உண்மையில் வரவேற்கத்தக்க விடையம். இன்று பொழுது போக்கு அம்சங்கள் அதிகமாக வளர்ந்து வருவதால் மாணவர்கள் பாடசாலை மற்றும் ரியூசன் கல்வியில் மட்டுமே நின்று விடுகின்றார்கள். இன்றைய மாணவர்களில் பெரும்பாலானோர் புத்தகப் பூச்சிகளாகவே இருக்கின்றார்கள். இவ்வாறான வெளிச் செயற்பாடுகள் நிச்சயம் அவசியமானவை. இவை காலத்தின் தேவையும் கூட.

இந்த நடைமுறையை அடுத்து வரும் புதிய செயற்குழு உறுப்பினர்களும் பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாக திவாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். அவர் மேலும் கூறுகையில்.

சங்கத்தின் முன்னைய செயற் குழு உறுப்பினர்கள் வழமையாக செய்வதுபோன்று கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளை ஒன்றிணைத்தும் மேற்படி போட்டிகளை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் நடத்தியுள்ளோம். எமது சங்கத்தில் அங்கம் வகிக்கும் மருத்துவபீட தமிழ் மாணவர்களால் கொழும்பில் மருத்துவமுகாம் நடாத்தப்பட்டது.

அப்படியாயின் இதையெல்லாம் நடத்துவதற்கு நிதி வேண்டுமே அதற்கு என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டபொழுது.

எமது சங்கத்திற்கு யாரும் நிதி வழங்குவதில்லை எமது பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் அவ்வாறு நிதி கேட்க முடியாது. தெரிந்தவர்கள் வர்த்தக பிரமுகர்களிடமே நிதியை பெறுகின்றோம்.

அதுவும் எமது தேவைகளை நிறைவேற்ற போதுமானது அல்ல. இருந்தாலும் எமது சங்க உறுப்பினர்களின் உடல் உழைப்பை முபமையாக பயன்படுத்தி வேலைத்திட்டங்களை கொண்டு செல்கின்றோம். அது எமது நம்பிக்கை. எல்லா நிகழ்ச்சி திட்டங்களுக்கும் பணத்தை எதிர் பார்க்க முடியாதுதானே.

வேறு எவ்வகையான செயற்பாடுகளை நீங்கள் செயற்படுத்துகின்றீர்கள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலை சட்டம் முகாமைத்துவம் விஞ்ஞானம் மருத்துவம் ஆகிய பீடங்களில் 200 முதல் 225 வரையான தமிழ் மாணவர்கள் மாத்திரமே உள்ளனர். சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களை எவ்வாறு ஒன்றிணைக்கின்றீர்கள். அவர்களிடையேயாயான ஒற்றுமையை எவ்வாறு பலப்படுத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்றீர்கள் எனக் கேட்டோம்.

அவர்கள் அனைவரையும் உள்ளடக்கியே எமது சங்க செயற்பாடுகள் நடைபெறுகின்றன. சகல பீடங்களையும் ஒன்றிணைத்து ஒன்று கூடல் நிகழ்வை நடாத்தினோம். இந்நிகழ்வில் அனைத்து பீடங்களைச் சேர்ந்த மாணவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பீடங்களுக்கிடையில் நாடக விவாதம் போட்டிகள் எமது சங்கத்தால் நடாத்தப்பட்டன. சட்டபிடபீடாதிபதி செல்வக்குமரன் உட்பட ஏனைய பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு பங்களிப்புடன் தடைகளைத் தாண்டி செயற்பட்டு கொண்டிருக்கின்றோம். எமது சங்கத்தின் முத்தமிழ் விழா வருட இறுதியில் நடைபெறுவது வழக்கம். ஆனால் நாட்டின் நெருக்கடியான நிலை மற்றும் சங்கத்தின் செயற்திட்டங்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு 2008 ஆம் ஆண்டிற்கான முத்தமிழ் விழாவை இந்த வருடம் பெப்ரவரி மாதம் நடாத்த எமது சங்கம் திட்டமிட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தில் பல சங்கங்கள் உள்ளன. ஆனால் பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும் உள்ளேயும் பல நிகழ்வுகளை நடாத்துவது தமிழ்ச் சங்கம் மட்டுமே என்பது பல்கலைக்கழக நிர்வாகத்தினர் வெளிப்படையாகவே தெரிவித்த கருத்தாகும்.

உண்மைதான் இன்றைய சூழ்நிலையில் எமது தமிழ் மாணவர்கள் நிறைய விடையங்களை எதிர்பார்க்கின்றார்கள். அவர்களுக்கு நிறைய தேவைகள் இருக்கின்றன. அவற்றை இனங்கண்டு தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு பல்கலைக் கழகங்களுக்கே உண்டு. அந்தவகையில் துணிந்துநின்று செயற்படும் கொழும்பு தமிழ்ச்சங்கம் தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டியது இன்றைய தேவையாகவுள்ளது.

காலகண்டன்


ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 03 - இருக்கை 03

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் /ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
எஸ். ரஞ்சகுமார்
க. பிரணவன்
பஸ்லான் மொஹமட்

கௌரவ ஓவியர் :
ஆசை இராசையா

ஓவியர் :
சஞ்ஜீத்

முதன்மை வடிவமைப்பு :
முஜீன்நாத்

வடிவமைப்பு :
க. பிரணவன்
சோ.விபுலன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதீஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாநகர சபையில் காணி, கட்டிடங்களினுடைய உரிமையாளர்களின் பதிவை மாற்றுதல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு



ஒரு தீபம் பல சுடர்களாகும்
இந்த தீபத்திலிருந்தும் பல தீப்பந்தங்கள் தோன்றும் !!




விளைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org